உ

சிவமயம்

# தெல்லிப்பழை கிழக்கு

# சைவப்பிரகாச வித்தியாசாலை

# வச்சிரவிழா மலர்

## 1960

# மக்கள் வைத்தியசாலை

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

★

மக்கள் நன்மையையும், வசதியையும், சுகாதார
வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட
சிறந்த வைத்தியசாலை இதுவே.

ஸ்தாபிதம் : 28-11-58

திறக்கப்படும் நேரம் : காலை 7-30 தொடக்கம் மாலை 9-00 மணி வரை

அவசர நோயாளர் இரவுபகல் எந்நேரத்திலும்
கவனிக்கப்படுவர்.

ஆங்கில வைத்திய உயர்தர சிகிச்சைபெற
உதவும் இடம்.

★

**OUR MOTTO IS SERVICE**

# PEOPLE'S DISPENSARY

(MANAGING PROPRIETOR : **MR. K. S. KANDIAH**)

CHUNNAKAM.

For All Fashionable Textile Goods

VISIT

# Rajasthan Textiles

173, K. K. S. ROAD :: JAFFNA

*For your Textile Requirements*

VISIT

★

# R. B. & BROTHER

SAREE SPECIALISTS

178, K. K. S. ROAD :: JAFFNA

உ

உயர்ந்த ரகம் !                    நிதான விலை !!

## விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

22, பெரியகடை                    : :                    யாழ்ப்பாணம்

சொந்தக்காரர் : ஆ. மயில்வாகனம்

★ பெனறிஸ்
★ மைசூர்
★ பெங்களூர்
★ ஜோஜெற்
★ காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளும்
★ பட்டுவேட்டி சால்வைகளும்

விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் ஆரோக்கியத்திற்கேற்றதும்
அன்பளிப்பிற்குப் பெருமைவாய்ந்ததும்
உங்கள் பணத்திற்குப் பெறுமதி வாய்ந்த

## எவர்சில்வர் பாத்திரங்கள்

பலவிதமான வகைகளிலும்

நாகரீகத்திற்கேற்ற – வீட்டுக் கேற்றுகளும், ஜன்னல் கிருதிகளும், புதுவிதமான பலவித இரும்புப் பெட்டிகளும், சோவில் பட்டுக் குடைகளும் எங்களிடம் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# எவர்சில்வர் மாளிகை

241, கே. கே. எஸ். ரோட்டு          : :          யாழ்ப்பாணம்

சொந்தக்காரர் : V. S. நடராசா அன் சன்.

வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது !!

மாணவர்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

# G. C. E. எண்கணித பரீக்ஷகர்

ஆசிரியர் : க. அரிராசசிங்கம், B. A. (Lond.)

இதில்

**1948—1959ம் வருடங்களிலே நடைபெற்ற**

S. S. C., G. C. E. பரீட்சை வினாப்பத்திரங்களும்


அடங்கியுள்ளன.

**மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்கு மிகவும் உதவியாயிருக்கும்.**

பதிப்பாளர் :

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

**யாழ்ப்பாணம்**



குணம், மணம், ருசி நிறைந்தது!

**K. P. லிங்கம்**

**நல்லெண்ணெய்**

உபயோகிக்க சிறந்தது...

போன் நம். 457.

**தயாரிப்பாளர் : K. பாமலிங்கம்.,**

**No. 26, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்**

For Pleasing results

"PRINCE"

CHUNNAKAM



சிறந்த போட்டோக் கலைக்கு " பிறின்ஸ் " படப்பிடிப்பாளர்


சுன்னாகம்

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | தேவாரம் | ... | ... | 1 |
| 2. | பாடசாலைக் கீதம் | ... | ... | 2 |
| 3. | வாழ்த்துகள் | ... | ... | 3 |
| 4. | முகாமையாளர் குறிப்புகள் | ... | ... | 10 |
| 5. | பத்திராதிபர் குறிப்புகள் | ... | ... | 13 |
| 6. | தலைமையாசிரியர் அறிக்கை | ... | ... | 14 |
| 7. | பாடசாலைச் சரித்திர அட்டவணை | ... | ... | 18 |
| 8. | அறிஞர் பகுதி | ... | ... | 20 |
| | I. "சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆரம்பம்" திரு. ச. அம்பிகைபாகன், B. A. அவர்கள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர். | | | |
| | II. "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" பண்டிதை த. அப்பாக்குட்டி அவர்கள், சதானந்த வித்தியாசாலை | | ... | 21 |
| 9. | பழைய மாணவர் பகுதி | ... | ... | 23 |
| | I. "எனது அரிய அன்னை" திரு. அ. சரவணமுத்து அவர்கள் இளைப்பாறிய பெரும்பாக வித்தியாதரிசியும் பழைய மாணவரும். | | | |
| | II. "நன்றாகச் சிரியுங்கள்" தெல்லியூர்ச் சிவானந்தன் | | ... | 24 |
| 10. | பாடசாலை மாணவர் பகுதி | ... | ... | 26 |
| | I. வெள்ளை இராணி | ... | ... | 26 |
| | II. எனது யுத்த வீரன் | ... | ... | 26 |
| | III. உண்மை தந்த பரிசு | ... | ... | 26 |
| | IV. வாத்தின் கர்வபங்கம் | ... | ... | 27 |
| | V. அண்ணாவும் ஔவையும் | ... | ... | 27 |
| | VI. முத்தோ அரும்போ | ... | ... | 28 |
| | VII. உயர் வாழ்வு | ... | ... | 29 |
| | VIII. அறத்தின் சிறப்பு | ... | ... | 30 |
| | IX. தமிழ்மொழியின் மேன்மை | | ... | 31 |
| | X. பாரதி வாழ்விலே | ... | ... | 32 |
| | XI. My Pet | ... | ... | 33 |
| | XII. My first visite to the Aerodrome | | ... | 34 |

| | | பக்கம் |
|---|---|---|
| 11. | சங்கங்கள் : ... ... | 35 |
| | I. மேல் வகுப்பு மாணவர் சங்கம் ... | 35 |
| | II. மத்திய வகுப்பு மாணவர் சங்கம் ... | 35 |
| | III. ஆரம்ப வகுப்பு மாணவர் சங்கம் ... | 36 |
| | IV. சமயாபிவிருத்திச் சங்கம் ... ... | 36 |
| | V. Literary Association ... ... | 37 |
| | VI. பொருள் விநியோகச் சங்கம் ... | 37 |
| | VII. பகற்போசன நிர்வாக சபை ... | 38 |
| | VIII. பெற்றோர் ஆசிரியர் சங்கம் ... | 38 |
| 12. | இல்லங்கள் ... ... | 40 |
| | I. தம்பி இல்லம் ... ... | 40 |
| | II. சின்னப்பா இல்லம் ... ... | 40 |
| | III. சுந்தரமூர்த்தி இல்லம் ... ... | 41 |
| 13. | பரீட்சைப்பேறுகள் ... ... | 42 |
| | I. சி. பா. த. ப. ... ... | 42 |
| | II. எட்டாம்வகுப்பு ... ... | 42 |
| | III. சைவசமயபாடப்பரீட்சை ... ... | 42 |
| 14. | பரிசில் விபரங்கள் ... ... | 43 |
| | I. பேச்சுப்போட்டி ... | 43 |
| | II. தமிழ்மறைத்தேர்வு ... ... | 43 |
| | III. எழுத்துப்போட்டி ... ... | 43 |
| | IV. திருமுறைப்போட்டி ... ... | 43 |
| | V. விளையாட்டுப்போட்டி ... ... | 44 |
| | VI. இல்லப்போட்டிகள் ... ... | 44 |
| 15. | பாடசாலை ஆசிரியர்கள் ... ... | 45 |
| 16. | சம்பவத்திரட்டு ... ... | 46 |
| 17. | நிதி உதவியோர் ... ... | 47 |


---



எங்கள் வித்தியாசாலையை நிறுவிய
**பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள்**

உ
சிவமயம்

தெல்லிப்பழை கிழக்கு

# சைவப்பிரகாச வித்தியாசாலை
# வச்சிரவிழா மலர்
# 1960

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னேபோற் றிருமேனி யுடையான் றன்னைப்
பொங்குவெண் ணூலானைப் புனிதன் றன்னை
மின்னானை மின்னிடையாள் பாகன் றன்னை
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தான் றன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லாதானைத்
தத்துவனை யுத்தமனைத் தழல்போல் மேனி
அன்னானை ஆரூரி லம்மான் றன்னை
அறியா தடிநாயேன் அயர்த்தவாறே.

## புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

# பாடசாலைக் கீதம்

★★★

**பல்லவி**

வாழ்த்து வோம் நாமே வையகந் தனிலே
வளர்மதி போல் வளர்க வென்றே (வாழ்)

**அனுபல்லவி**

தெல்லி கிழக்கில் சிறந்தே விளங்கும்
சைவப் பிரகாச வித்தியா சாலையை (வாழ்)

**சரணம்**

அந்தணர் குலத்து வந்தவ தரித்த
**சுந்தர மூர்த்தி**த் தோன்றல் தன்னையும்
சந்ததமும் நாம் சிந்தையி லெண்ணும்
அந்தமில் சீர்த்**துரை யப்பா** தன்னையும் (வாழ்)

வெய்யவ னுதிக்க விரியு மம்புயம்
செய்ய சின்னமாய்ச் சிறந் தொளிரவும்
மெய்ப் பொருள் காண்டல் மெய்யறிவென்னும்
வையகம் புகழும் வாய்மொழி வெல்லவும் (வாழ்)

சைவமுந் தமிழுஞ் சாத்திரம் பலவும்
தெய்வ பக்தியும் சிறந்தே யிலங்க
மெய்ம்மையோடன்பு மேவிடும் முயற்சி
கைவர மாணவர் கதித்தே துலங்க (வாழ்)

பால்மணம் அருத பாலகர் தமைப்
பாரினில் வாழப் பண்படுத் திடும்
சால்புறும் பாடசாலையாசிரியர்
மேலவர் புகழ மேன்மை யெய்திட (வாழ்)

வித்தியா சாலையை விருத்தி செய்தலே
உத்தம தொண்டாய் உளத்திற் கொண்டிடும்
சத்தியன் ஆன்றோர் சாலவே புகழ்
உத்தமன் ஜயரத்தினக் கோமானை (வாழ்)

# வாழ்த்துகள்

★

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பேராசிரியராக இருந்து இளைப்பாறிய
**பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.**

வேதாகம உண்மையையும் சைவசித்தாந்தப் பெருமையையும் எடுத்து நிலை நாட்டி விளக்கஞ்செய்த பெருமை காசிவாசி **பிரம்மஸ்ரீ செந்திநாதையர்** அவர்களுக்குரியது. ஐயர் அவர்கள் நாவலர் பெருமானின் உத்தம மாணவர்; பரமோபகாரசீலர்.

ஐயர் அவர்களின் வழியில் தோன்றியவர்கள் **பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயர்** அவர்கள். இவர்கள் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் நோக்கமாக 1900ஆம் ஆண்டில் நெல்லிப்பழை கிழக்கில் மேற்குறிப்பிட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார்கள். அது சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்து வருகின்றது.

சைவமரபு, தமிழ்மரபு தெரிந்தவர்களும் மகாசனக்கல்லூரி அதிபருமான **திரு. தெ. து. ஜயரத்தினம்** அவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமைக்காரராய் அமைந்தது, தாபகரான **திரு. சுந்தரமூர்த்தி ஐயர்** அவர்களின் புண்ணிய விசேஷத்தை எடுத்துக்காட்டுவதாயிருக்கின்றது.

இன்றையதினம் தாபகரான ஐயர் அவர்களைப் பாராட்டும் முகமாக, சைவப்பிரகாச வித்தியாசாலையின் சஷ்டியப்த பூர்த்தியாகிய **வச்சிரவிழா**வைக் கொண்டாடுகின்றோம்.

மைந்தர்காள் மகளிர்காள் யாவரும் வம்மின் !
செந்தமிழ் மொழியும் சீர்பெறு சைவமும்
இந்தநன் னாட்டில் எழில் பெற் றோங்குக;
எந்தையர் யாயர் இவர்தமைப் பயந்தோர்
முந்தையோர் யாவரும் முயல்பெருந் தவத்தால்
வந்துதித் தெழுந்து வளருநங் கழகம்
வழிவழி சிறந்து வாழிய பெரிது; என
வாழ்த்துவம் வம்மின் போற்றுவம் வம்மின் !
நகுலே சுவரனும் நகுலே சுவரியும்
நல்குஅருள் வெள்ளம் நனிபெரு குகவே.


★★
★

வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி
பண்டிதர் **ச. பொன்னுத்துரை** அவர்கள்

முக்கண் ணிறைவ னுரைக்கவுணர்
முதல்வன் பொதியக் குறுமுனியால்
முன்னை நலிவு போய்ச்சங்க
முகத்தான் வளர்ந்த முத்தமிழே!
திக்கெங் கிலுமுன் சேய்க்குலங்கள்
திகழ்ந்து விளங்கத் திருவுடனே
தினமுங் கன்னித் திறமமைந்து
திகழுந் தெய்வத் திருத்தமிழே!
மிக்க புகழ்ச்**சுந் தரமூர்த்தி**
மிளிரு முயரந் தணர்திலகன்
மேதை நினக்கோ ரரசிருக்கை
மேவத் தெல்லிப் பழைகிழக்கில்
தொக்க சிறப்போ டமைத்தனனல்
தொடர்ந்த ததன்றன் வைரவிழா
தொன்மை மிளிர வாங்கிருந்து
தூய வரசு நடத்துதியே.

பொல்லாச் சமய விருணிறைந்து
புனிதச் சைவங் குன்றியநாள்
போற்றும் நால்வர் புனிதமறை
புகன்று புன்மை யகற்றினர்காண்
கல்லாக் கயவர் சைவநெறி
காணு தகறல் பொருதரும்போர்
கண்ட பெருநா வலன்போலக்
கவின்சேர் சைவங் களித்திலங்க
வல்லார் திரு**சுந் தரமூர்த்தி**
வகுத்த சைவப் பிரகாச
வளருங் கழக வைர விழா
வரநற் சைவம் மகிழ்ந்ததுவே
நல்லார் மலியச் சமயநெறி
நண்ணத் தமிழும் தழைத் தோங்க
நற்குன் றிட்ட விளக்கெனவே
நாளும் திகழ்ந்தே வளருகவே.

★



எங்கள் வித்தியாசாலையை இப்போதிருக்கும் இடத்தில் நிறுவிய
**உயர்திரு. தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்கள்**

வடமாகாண வித்தியாதிகாரி

**திரு. சி. உ. சோமசேகரம்,** M. A. (Ed.) (Lond.) **அவர்கள்**

★

சிவநேயச் செல்வர்களே !

சென்ற அறுபதாண்டுகளாக இப்பாடசாலை உங்கள் கிராமத்திற்கு அவ்வக் காலத்திற்குத் தகுந்த முறையில் தொண்டாற்றி வந்திருக்கிறது

இது காறும் அளித்த கல்வி எவ்வளவிற்குப் பயன்பட்டிருக்கிறது என்பதை ஆராய இப்போது சந்தர்ப்பம் வந்திருக்கிறது.

1. உங்கள் கிராமத்தில் உள்ளவர்கள் ஆலய வழிபாட்டிலும், எல்லாம் வல்ல இறைவனிலும் நம்பிக்கையும், பிறவித்தளையினின்றும் விடுதலை பெறும் குறியை அடைய வேட்கையும், உறுதிப்பாடும் உள்ளவர்களாக இருக்கின்றனரா ?

2. உங்கள் முறைகள் மாணவர்களுடைய ஜீவனோபாயத்தைப் பற்றிய பிரச்சினைகளை நன்குணர்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கு வேண்டிய முறைகளை இலட்சியமாக அனுசரிக்க ஊக்கப் படுத்துகின்றனவா ?

உங்கள் பாடசாலை மேற்கூறிய இலட்சியங்களைக் கவனித்து, நற்காலத்திற்குப் பயன்படக்கூடிய முறைகளின்படி சீராக அமைக்கப்பட்டு மேலும் மேலும் உங்கள் மாணவருக்கு வேண்டிய நிறை கல்வியை அளித்து வருமாறு ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

---

பலாலி அரசினர் ஆசிரியகலாசாலை அதிபர்

**திரு. சி. கந்தசாமி** BSc, (Lond.) Dip-in-Ed. (Lond.) **அவர்கள்**

★

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்குமுன் பிரம்மஸ்ரீ **க. சுந்தரமூர்த்தி ஐயர்** அவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியபோது அவர்கள் சைவமும் தமிழும் தழைக்கவேண்டுமென்ற ஆராமையுடன் அத்தொண்டைத் தொடங்கினர் என்பதனை அப்பாடசாலை இன்று எய்தியிருக்கும் உயர் நிலையிலிருந்தே நாம் நன்கு அறியலாம். அந்த நாட்களில் பாடசாலைகள் பல மைல்களுக்கொவ்வொன்றேயிருந்தன. அதுவும் சைவப்பாடசாலைகளின் தொகையோ விரல் மடித்தெண்ணக்கூடியதாயிருந்தது. சைவப் பாடசாலைகளைத் தாபித்தகனல்

சைவப் பிள்ளைகள் பேறடைவதொன்றே கண்கண்ட பயனாயிருந்ததன்றி பொருள் வருவாயாகிய ஊதியம் எதுவும் ஏற்படவில்லை. அத்தகைய காலத்திலே சைவ மாணவர் தம் மத பண்பாடுகளுக்குரிய சூழலில் வளம்பெற வளர்ந்து கல்விப் பயன்பெற வேண்டுமென்ற நோக்கமொன்றனையே கருத்திலிருத்தி நல்ல ஒரு கல்லூரிக்கு வித்திட்ட ஐயர் அவர்களை நாம் எத்துணை நன்றியறிதலுடன் நினைவுகூரவேண்டுமென விளக்கத் தேவையில்லை. வைரம் மிக்க நல்ல மரம் குளிர் நிழல் தந்து உயரும் பான்மையில் இவ்வித்தியாசாலையும் நலப்பல நல்கி இன்று வச்சிரவிழாக் கொண்டாடற்குரிய அறுபது ஆண்டுகள் நிறைவெய்து கிறது. இது சைவ நன்மக்களுக்கும் சிறப்பாகத் தெல்லிப்பழையில் வசிப்பவர் களுக்கும் குதூகலந்தரும் நிகழ்ச்சியாகும்.

சென்ற ஆண்டு இப்பாடசாலையில் பரிசளிப்பு விழாவின்போது தலைமை தாங்கும் பேறு தமியேனுக்குக் கிடைத்தது. இப்பாடசாலையினது தொண்டின் சிறப்பை அன்று திரளாக வந்திருந்த மக்களின் முகத்திலே துலங்கிய திரு வெண்ணீறும் அவர்தம் பண்பாடும் நன்கு வெளிப்படுத்தின. இப்பாடசாலையின் தலைமையாசிரியர் ஸ்தாபகரின் நோக்கத்திற்குகந்த முறையில் தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையைத் தொடங்கிய ஐயர் அவர்களின் சந்ததியார் இதனை நடத்த இயலாமல் இடருற்றபோது அதன் பொறுப்பை ஏற்று வளர்த்த **திரு. துரையப்பாபிள்ளை**யினுடைய அன்புக்கரத்தின் மகிமையை எவ்வாறுரைப்பேன். அவர்தம் அருமை மைந்தர் **திரு. து. ஐயரத்தினம்** அவர் கள் முகாமைக்காரராக இருப்பதினால் ஸ்தாபகரின் குறிக்கோள் இனிது நிறை வேறுமென்பது திண்ணம். இதனோடு தொடர்புற்ற சைவ ஆங்கில உயர்தரக் கல்லூரியால் இந்தத் தமிழ் வித்தியாசாலை நசுக்கப்படாது அதன் தண்ணிய நிழலில் வளர்ச்சியுற்றுவருவது பெரிதும் போற்றத்தக்கது.

காலந் தவறாமற் கருமமாற்றல், நல்ல சைவசீலம் ஆகிய இரண்டும் இப் பாடசாலைக்கு இருகண்ணாயமைந்து இதன் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்து கின்றன. வச்சிரவிழாவுடன் ஒரு வெளியீடும வெளிவர எல்லாத்தகுதியு முடைய இப்பாடசாலையின் சிறப்பு எதிர்காலத்தில் பல்லாற்றானும் சுடர்விட்டு மிளிர்வதாக எனப் பன்முறை வாழ்த்துகின்றேன்.

வட பெரும்பாக வித்தியாதரிசியாகவிருந்து இளைப்பாறிய

## தெல்லிப்பழை, திரு. சே. தியாகராசா அவர்கள்

★

இன்றைய விஞ்ஞான உலகில் உலகம் முழுவதும் பாடசாலைகளும், கழகங்களும், கல்லூரிகளும், கலாசாலைகளும் மலிந்து விளங்குகின்றன. விஞ்ஞான வளர்ச்சி பெறாத பழங்காலத்தில் மக்கட் சமுதாயத்தின் பெரும்பகுதியினர் கல்வியறிவு பெறாத பாமரராகவே வாழ்க்கை நடத்தினர். அக்காலத்திற் சில அறிஞர்களே நூலறிவிற் பாண்டித்தியம் மிக்க கல்வியாளராக விளங்கினர். ஏட்டில் எழுத்தாணிகொண்டு எழுதி மிக்க பிரயாசையுடன் தம் கல்வியறிவை வளர்த்துக்கொண்ட இச்சான்றோர்களிற் சிலர் சனசமூகத்திலும் கல்வி ஒளியைப்பரப்ப முன்வந்து சிறு கல்வி நிலையங்களை உண்டாக்கி அந்த மாணவர்களுக்குக் கல்வியூட்டிவந்தனர். ஈழத் தமிழ்ப்பகுதிகளிலும் இம்முயற்சி ஆங்காங்கு நடைபெற்றது. தெல்லிப்பழை செய்த தவப்பயனாக மக்களிடையே சைவ ஒளியையும், கல்வி அறிவையும் ஊட்டுதற்குச் சில அறிஞர்கள் முயற்சி எடுத்தனர். இவர்களுள் தலைசிறந்தவர் பிரம்மஸ்ரீ **சுந்தரமூர்த்தி ஐயர்** அவர்கள் ஆவர். இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தமது காணி, பொருள், வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து இந்தப்பாடசாலையை அவர்கள் ஸ்தாபித்தார்கள். இன்றும் இப்பாடசாலை ஐயர் பள்ளிக்கூடமென அவரின் நாமத்தாலேயே கூறப்படுவது மெச்சத்தக்கதாகும். கல்வி ஒளியை ஊட்டுவதற்கு இரவுபகலாக ஊண் உறக்கமின்றி உழைத்த அப்பெரியாரின் சேவை என்றும் நினைக்கப்படவேண்டிய தொன்றாகும். அக்காலத்தில் ஐயர் அவர்கள் மூன்று வகையிற் சிரமப்பட்டு அப்பணியை நிறைவேற்றினார்கள். மாணவர்களைத் தேடிப்பிடித்துப் பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்தல், ஆசிரியர்களிடம் கால்நடையாகத்திரிந்து கற்பிக்கும் பணியில் அவர்களை ஈடுபடுத்துதல், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய தளவாடங்களையும் பிறவற்றையுஞ் சேகரித்தல் ஆகிய மூன்று கைங்கரியங்களும் அக்காலத்திற் சாதாரணமானவையல்ல.

பள்ளிக்கூடத்தின் சரித்திரத்தை அறியும் போதுதான் நமது முன்னோர்கள் தமது அறிவொளியை ஊட்டுதற்கு எவ்வளவு சிரமப்பட்டு உழைத்தார்கள் என்பது தெரியும். பெரியார் அவர்களின் கடும் உழைப்பும் சிரமமும் இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் வீண்போகவில்லை. பல ஆசிரியர்கள் முன்வந்து முழுமனதுடன் ஒத்துழைத்துப் பணிபுரிந்தனர். தெல்லிப்பழையிலுள்ள ஒவ்வொருவரும் தத்தம் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பினார்கள். நாளடைவில் அரசாங்கமும் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவியளித்தது.

நாளொரு வண்ணமாகப் பாடசாலே வளர்ச்சிபெற்றுச் சைவ ஒளியையும், தமிழ் மணத்தையும் நாற்புறமும் வீசியது. இப்பாடசாலேயிற் கல்வி பயின்றதன் பயனுக நவநாகரிகம் மிகுந்த சூழ்நிலேயிலும், கடவுட்பற்றும் தமிழ் அபிமானமும் உடையவராய்த் தெல்லிப்பழை மக்கள் விளங்குகின்றனர். "தொட்டிலிற் பூண்ட பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதனை உணர்ந்து தெல்லிநகர் மக்கள் எல்லாரினதும் உள்ளத்திலும் சைவ ஆசாரங்களேயும், கடவுள் நம்பிக்கையையும் ஆழமாக வேரூன்றச் செய்த பெருமை இப்பாடசாலேக்கே உரியதாகும்.

கையில் ஏடுதாங்கிக் குறுநடை நடந்துசென்று இப்பாடசாலேயில் அரிவரி வகுப்பைத் தொடக்கிப் படிக்காத குழந்தையே தெல்லிப்பழையில் இல்லே எனலாம். தெல்லிப்பழை மக்கள் எல்லாருக்கும் இது ஒரு தாய்ப்பாடசாலேயாகும். உலகம் ஒன்றுபட்டு விரிந்ததன் காரணமாகப் பற்பல கலாச்சாரங்களேயும், பழக்க வழக்கங்களேயும் கலந்துகொண்டு பெரும்பாலான கலாசாலேகள் இன்று இயங்குகின்றன. அப்படிப்பட்ட இக்காலத்திலும் கலப்பில்லாத தனிப்பெருஞ் சைவப் பண்புகளே உறுதியாகக் கடைப்பிடித்துச் சைவ சமயத்தின் உயிரொளியைப் பிள்ளேகட்கு இக்கலாசாலே ஊட்டுகின்றது. நால்வர் குருபூசை, சமய தீட்சை, சமய பாடப்பரீட்சை, சமயவிழாக் கொண்டாட்டம் என்பவற்றில் இக் கலாசாலே காட்டும் ஊக்கமும், அவைகளேச் சிறப்பாக நிறைவேற்றுந்திறமையும் தெல்லிப்பழை மக்கள் தளர்ச்சி அடையாது இன்னும் பல ஆண்டுகட்குத் தாய்மதச் சேவையில் ஈடுபடுவதற்கு நல்ல அறிகுறியாகும்.

அறுபது ஆண்டுகள் வளர்ந்து முதிர்ந்து வச்சிரவிழாப் பெறும் சிறப்பினை அடைந்து நம் தாய்ப்பாடசாலே நமக்கு முன் காட்சியளிக்கின்றது. பெற்ற தாயின் சட்டியப்தபூர்த்தியிற் களிப்புற்று உற்சாகங் கொள்ளும் மக்கள் போல ஆசிரியர்களும், மாணவர்களும், ஏனைய மக்களும் தாய்ப்பாடசாலேயின் அறுபதாம் ஆண்டு நிறைவினை இனிது கொண்டாடி வெற்றிக்களிப்புடன் திகழ்கின்றனர். இறைவன் திருவருளால் மேலும் மேலும் நலனெய்தி தூய சைவ ஒளியை வீசி நம் தாய் நிலேயம் என்றென்றும் வாழ்வதாக.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபராகவிருந்து இளைப்பாறிய

**திரு. சி. சுவாமிநாதன், B. A. அவர்கள்.**

சிவக் கோலமும் தவமாண்பும் நிறைந்த பிரமஸ்ரீ **க. சுந்தரமூர்த்தி** ஐயரவர்கள் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை சென்ற 60 ஆண்டுகளாக ஆற்றிவரும் சேவை குறித்து அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். அவ்வித்தியாசாலை நெல்லிப்பழையில் சைவமும் தமிழும் வளர்ச்சியடையப் பெருந்தொண்டாற்றி மற்றும் சைவப்பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக விளங்கி வருகின்றது.

வித்தியாதருமத்தில் வெற்றிகண்ட **திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை** அவர்களது பெருமுயற்சியால் வளர்ச்சியடைந்த குழந்தை இன்று அன்னாரது புத்திரச்செம்மலும் மகாஜனக்கல்லூரி அதிபருமாகிய உத்தமன் **திரு. தெ. து. ஜயரத்தினம்,** B.A. அவர்களின் முகாமையின்கீழ் பருவமடைந்து வாழ்க்கையெய்திச் சைவத்தமிழ்க் குழந்தைகளை உருவாக்கி வருகின்றது. தனது வளர்ச்சியை நினைத்து **வச்சிர விழா** கொண்டாடும் இவ்வித்தியாசாலை இன்று போல் என்றும் ஒற்றுமையும் நற்பண்பும் வாய்ந்த ஆசிரியர்களைத் தன்னகத்தே கொண்டு வருங்காலத்தில் சைவப் பண்பமைந்த தமிழ் மக்களை உருவாக்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசியை மனப்பூர்வமாக நல்குகின்றேன்.

# முகாமையாளர் குறிப்புகள்

★★★★★★★★


**திரு. தெ. து. ஜயரத்தினம்,** B. A. **அவர்கள்**

"உலோகாயத னெனும் ஒண்டிறற் பாம்பு" தன் கடுவிடத்தை எங்கும் பரப்பி மக்களின் ஞானச்சுடரை மழுக்கி வருவது கண்கூடு. மக்கள் இறைவனை மறந்து புலன்வழிப்பட்டுச் சண்டமாருதச்சுழலில் அலையும் தளிர்போல வாழ்வதைப்பார்த்து அறிஞர்கள் வருந்துகின்றார்கள். அவர்களை மீட்டுச் சுபீட்ச வழிப்படுத்தப் பாடுபடுகிறார்கள். இஃது இன்று நேற்று உண்டாய புதுமையன்று. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயும் அதற்கு முன்னரும் இந்தச் சூழ்நிலை நிலவியிருந்தது.

இத்தகைய நிலைமையை மாற்றியமைப்பதற்கு முயன்ற பெரியார்களுள் தெல்லிப்பழைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவிய அந்தணர் குலதிலகராகிய பிரமஸ்ரீ **க. சுந்தரமூர்த்தி ஐயர்** அவர்களும் ஒருவராவர். மக்களின் ஆத்மீக வளர்ச்சியைப் பெரும் இலட்சியமாகக் கொண்ட ஐயரவர்களே 1900-ஆம் ஆண்டில் தெல்லிப்பழையிலே முதன் முதல் ஒரு சைவ வித்தியாசாலையை நிறுவிய பெருமைக்கு உரிமை பெற்றவராவர்.

தாம் ஊட்டவெண்ணிய கல்வி மாணவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவவேண்டுமென்றோ, தமக்கோர் ஊதியம் தரவேண்டுமென்றோ ஐயரவர்கள் கனவிலும் எண்ணவில்லை என்பது எனது துணிபு. உத்தியோகத்துக்காகக் கல்வியூட்டுவது அவர்களது நோக்கங்களில் எள்ளளவேனும் இருக்கவில்லை. சார்ந்ததன் வண்ணம் அமையும் இளம்பிராயத்தில் சைவ மாணவர் சமயக்கல்வி பெற்றுச் சைவப்பண்பாட்டில் திளைத்துச் சைவவாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே ஐயரவர்களின் நோக்கமாயிருந்தது. **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** பரம்பரையில் வந்த சமயப்புத்துணர்ச்சியைத் தெல்லிப்பழையில் நிலைக்கச் செய்தவரும் ஐயரவர்களேயெனலாம்.

இத்தகைய பெரு நோக்குடன் தாபிக்கப்பெற்ற எங்கள் சைவப்பிரகாச வித்தியாசாலை சென்ற 60 ஆண்டுகளாக ஐயரவர்களின் நோக்கத்தைப் பெரிதும் நிறைவேற்றி வந்திருக்கிறதென்று சொன்னால் அது புகழுரையாகாது.



முகாமையாளர்

திரு. தெ. து. ஐயரத்தினம், B. A. அவர்கள்

ஐயரவர்களுடைய காலத்துக்குப்பின்னர் இவ்வித்தியாசாலையைப் பேணி வளர்த்தவர்களும் ஸ்தாபகருடைய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நெறிதவருமல் கடமையாற்றியுள்ளனர். இவ்வித்தியாசாலையை ஐயரவர்களிடம் பெற்று வளர்த்து முகாமையாளராகவிருந்து காலம் சென்ற எமது தந்தையாராகிய ஸ்ரீமான் **தெ. அ. துரையப்பாபிள்ளை** அவர்களது பெருமுயற்சியையும் நன்னோக்கங்களையும் அளவிடமுடியாது. இன்றைய நிலைக்குப் பாடசாலை வளர்ந்து வரக்காரணரும் அவரேயாவர். அவர்க்குப்பின் பொறுப்பாளராகவிருந்து கடமையாற்றிக் காலம் சென்ற ஸ்ரீமான் **கா. சின்னப்பா** அவர்களும் இத்தாபனம் வளர்வதற்கு வேண்டியவற்றைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்து வந்துள்ளனர் அவர்கள் சேவை என்றும் பாராட்டுதற்குரியதே. தலைமையாசிரியர்களாக விளங்கிய **திரு. க. நாகலிங்கம்** அவர்கள், **திரு. அ. பரமசாமி** அவர்கள், **திரு. து. ஐயாத்துரை** அவர்கள் தம் சேவைக்காலங்களில் பாடசாலையின் இன்றைய நிலைமைக்கு ஆதாரமான பெருமுயற்சிகள் செய்து வந்தனர். சிலகாலம் பதில் தலைமையாசிரியராக விருந்து தொண்டாற்றிய **திரு. தி. சுந்தரமூர்த்தி** அவர்களும் வித்தியாசாலையின் வளர்ச்சிக்காகச் செய்த சேவைகள் என்றும் நினைவு கூரத் தக்கன.

இன்றுள்ள நிலைமையில் இவ்வித்தியாசாலை மற்றைய சைவப்பள்ளிக் கூடங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சைவப்பண்பும், தமிழ்ப்பண்பும் ஒருமித்துத் திகழும்வகையில் ஆசிரியர்கள் தொண்டாற்றி வருவதையிட்டு மகிழாமல் இருக்க முடியாது. பாடசாலை நிர்வாகத்திலும் ஒரு தனிச்சிறப்பைக் காண்கிறோம். முகாமையாளருடைய நிர்வாகத்தின் பெரும்பகுதியைத் தலைமையாசிரியரிடமும், உதவியாசிரியர்களிடமும் ஒப்படைத்து அவர்களைப் பாடசாலை வளர்ச்சிக்குப் பொறுப்பாளராக அமைத்திருப்பது பாடசாலையின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமெனலாம். இதைவிட ஆசிரியர்களுடைய ஒற்றுமையும், பெற்றோர் ஆசிரியர் உறவும், மாணவர் ஆசிரியர் தொடர்பும் பரஸ்பர நல்லெண்ணம், நம்பிக்கை ஆகிய அடிப்படையில் வளர்ந்து வருவதும் பாடசாலை வளர்ச்சிக்குக் காரணங்களாம்.

இப்பொழுது தலைமையாசிரியராகக் கடமையாற்றும் **திரு. செ. சிவசுப்பிரமணியம்** அவர்கள் சென்ற 8 வருடங்களாகப் பாடசாலை வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு சேவை புரிந்து வருகின்றார். உதவி ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பையும், நன்மதிப்பையும் அதிக அளவிற்பெற்று நல்லொழுக்கமே வடிவெடுத்தாற்போல மற்றவர்க்கு முன்மாதிரியாக விளங்கி வருகின்றார். இத்தகைய தலைமையாசிரியர் வாய்க்கப்பெற்றமை எமது பாடசாலையின் பாக்கியமே. அவரும் உடனுசிரியர்களும் ஒற்றுமையாகக் கடமை புரிந்து வித்தியாசாலையை வளர்ச்சியடையச்செய்ய இறைவன் துணை நிற்பாராக.

1950 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொன்விழாக் கொண்டாட்டத்தின் பின் சென்ற 10 ஆண்டுகளாகப் பாடசாலை அடைந்த வளர்ச்சி போற்றற்குரிய தாகும். ஆசிரியர் தொகை, மாணவர்தொகை அதிகரித்துள்ளன. பாடசாலை உபயோகத்துக்காக 8 பரப்பு நிலம் விலைக்கு வாங்கி விளையாட்டு, தோட்டவேலை என்பவற்றுக்கு வசதி செய்துள்ளோம். மனையியல் ஆய்கூடம் கட்டும் வேலையும் ஆரம்பித்து நடைபெறுகிறது. முன்னேற்றத்திற்காக நாம் கொண்ட நோக்கத்தைச் சீக்கிரம் நிறைவேற்றி வைக்கத் திருவருளின் துணையையும், பெருமக்களின் உதவியையும் வேண்டி நிற்கிறோம்.

தெல்லிப்பழைக் கிராமத்துக்கு ஒரு சைவக்கொழுந்தாக விளங்கும் இவ் வித்தியாசாலை வளர்பிறைபோல வளர்ந்து சிறந்த தொண்டுகள் பலவற்றைப் புரிவதற்கு எல்லாம் வல்ல நடராசப் பெருமான் அநுக்கிரகம் பாலிப்பாராக.

---

ஞானம் நம் உள்ளத்திலுண்டு. இவை சாதாரணமாக மறைந்து கிடக்கின்றன. இத் திரையைத் திறப்பதுதான் கல்வி. அதுவே மனிதனுக்குள் மறைந்திருக்கும் பூரணத்தை வெளிப்படுத்துவது. — **விவேகானந்தா**

★ ★ ★

மௌனம் அறிவிற்கு அழகு. பொறுமை திறமைக்கு ஏற்றது.
— **மகாகவி காளிதாசன்**

★ ★ ★

அரசன் குடிகளின் தகப்பன் போன்றவன். அதிகாரிகளோ மக்களின் செவிலித் தாய்மார் போன்றவர். — **அசோகன்**

★ ★ ★

ஊர்காப்பாளருக்குப் பயந்து களவெடுக்காமல் இருப்பது சிறந்த நிலையன்று. அவர்கள் இல்லாதவேளையில் களவை எண்ணுதிருப்பதே மேலானது. அறிவுக்கு —நேர்மைக்கு — மனத்தினுல் வஞ்சகம் செய்யாதே. — **பண்டிதமணி சி. க.**

# பத்திராதிபர்கள் குறிப்புகள்

அகவிருளைப் போக்கி அறிவொளியை ஆக்கும் எங்கள் வித்தியாசாலையின் அறுபதாம் ஆண்டு பூர்த்தியடைகிறது. அதுகுறித்து நாமனைவரும் வச்சிரவிழாக் கொண்டாடுவதிற் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம். ஈழத்தின் திருமுகமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் அழகிய திலகம்போல் இலங்கும் தெல்லிப்பழை என்னும் பகுதியில் வாழ்ந்த அந்தணர் குல திலகருஞ் சைவத் தமிழ்ப் பெரியாருமாகிய பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களின் நன்னோக்கம் இன்று சைவப்பிரகாச வித்தியாசாலையாகத் திகழ்கின்றது.

சைவத்தையுந் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்ட அன்னாரது நினைவு நாட் கொண்டாட்டத்தோடு அன்னார் நிறுவிய வித்தியாசாலையின் சஷ்டியப்த பூர்த்தி விழாவையும் கொண்டாடுவது பொருத்தமாகுமென எண்ணி அதன் நினைவுச் சின்னமாக வச்சிரவிழா மலர் ஒன்றையும் வெளியிட முன்வந்துள்ளோம். அவ்வாறு வெளிப்படுத்தல் எங்களுக்குமட்டுமன்றித் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பெருமையளிப்பதாகும்.

நியாயமான அளவுக்குத்தான் எங்கள் தமிழ் அன்னை வெளியில் உலாவலாம் என்ற சட்டதிட்டங்கள் ஏற்படும் இக்காலத்தில் அவற்றை அகற்றி அவள் சுதந்திரமாக உலாவலாம் என்ற கொள்கையில் தமிழ் மக்களாகிய நாமனைவரும் முன்வர வேண்டும். அறிவுந் தொழிலும் ஆண்மையும் ஒழுக்கமும் அழகுமாகிய ஐம்பெரும் பேறுகளைக் கொடுக்கும் கல்விச் செல்வத்தை அளித்தருளும் வித்தியாசாலையின் சேவையைச் செய்நன்றி மறவாத தமிழர் மரபிற் றோன்றிய நாம் மறப்பது நன்றன்று. இந்த ஒப்புயர்வற்ற சிந்தனையே உங்கள்முன் மலராகப் பிரகாசிக்கின்றது.

மலரைப் பிரகாசிக்கச்செய்து யாவரையும் மகிழ்விக்க இவ்வித்தியாசாலை ஆசிரியர்கள் அனைவரும் சிரமம்பாராது வேண்டிய உதவிகளை மகிழ்வுடன் புரிந்துள்ளனர். மலர் அழகாக மலர வாழ்த்துரைகளையும், கட்டுரைகளையும் அறிஞர்களும் பழைய மாணவர்களும் மனமுவந்து உதவினர். மாணவர்களும் தம் ஆற்றலுக்கேற்ப விடயங்களைக் கொடுத்துதவினர். அன்புடைய பெரியோர்கள் பொருளுதவி புரிந்தனர். வியாபார அன்பர்கள் விளம்பரங்களைத் தந்து மலர் சிறப்புற வெளிவர ஊக்கமளித்தனர். "பிறின்ஸ் ஸ்ருடியோ" ஸ்தாபனத்தார் மலருக்கு அழகூட்டும் புகைப்படங்களை ஆயத்தஞ் செய்து உதவினர்.

"குகன் அச்சகத்தினர்" அச்சுவாகனமேற்றி மலரை நறுமணங் கமழ்தரச் செய்தனர்.

தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது வாழ்த்துக்களும், கட்டுரைகளும் கொடுத்துதவிய பெரியோர்கள், பழையமாணவர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும், பொருளுதவி புரிந்த அன்பர்களுக்கும், சுன்னாகம் "பிறின்ஸ்" படப்பிடிப்பு ஸ்தாபனத்தாருக்கும் எங்கள் விருப்பிற்கியைந்து மலரை அச்சிட்டு உதவிய குகன் அச்சகத்தினருக்கும், இன்னும் இம்மலர் சிறப்புற வெளிவர உதவிய அனைவருக்கும் உடனுசிரியர்களுக்கும் எமது பெருமகிழ்ச்சியையும் நன்றியையுந் தெரிவிக்கின்றோம்.

(இம்மலரில் வெளியிடப்படும் விடயங்களின் பொருள்களுக்குப் பத்திராதிபர்கள் பொறுப்பானவர்கள் அல்லர்)

சி. செல்லத்துரை
நா. ஆறுமுகம்
பொ. கனகரத்தினம்
(பத்திராதிபர்கள் வச்சிரவிழா மலர்ச்சபை)

# தலைமையாசிரியர் அறிக்கை

**முகவுரை :** இவ்வித்தியாசாலையை ஆரம்பித்து வைத்தவராகிய பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் சிவபதமடைந்த நாளாகிய மே மாதம் 26ஆம் தேதியை அன்னாரின் நினைவு நாளாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றோம். இவ்வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியடைகின்ற இத்தருணத்தில் இதன் வச்சிரவிழாவும் ஒருங்கே கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் நினைவு குறித்து வச்சிரவிழா மலர் எனப் பெயர் கொண்ட வெளியீடொன்று வெளிப்படுத்தவும் ஆவல் கொண்டோம். இவை இவ்வித்தியாசாலையோடு தொடர்பு கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றார், ஊரவர்கள், முகாமைக்காரர், வித்தியாபகுதியார் ஆகிய அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்குமென்பதிற் சந்தேகமேயில்லை. இவையெல்லாம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக.

**ஆரம்பகாலம் :** சைவப்பிள்ளைகள் பிற்காலத்திற் சைவாசார ஒழுக்கங்கள் உடையவர்களாக வாழவேண்டுமானாற் சிறுவயதிற் சைவப்பாடசாலைகளிலேயே கல்விகற்றல் வேண்டும். இளமையிற் கற்பவை, கேட்பவை, பழகுபவை யாவும் நன்கு பதியக் கூடியன. "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது பழமொழி. இவற்றை நன்குணர்ந்த பலபெரியார்களின் விருப்பமே இத்தகைய சைவப்பாடசாலைகள் விளங்குதற்குக் காரணமாகும். புன்னாலைக்கட்டுவனிலிருந்து வந்து தெல்லிப்பழையிற் செந்தண்மையோடு வாழ்ந்த அந்தணர் குல திலகரும், அறிவாற்றல்மிக்கவரும், ஆசார சீலருமாகிய பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் தமது உதார குணத்தினால் இவ்வித்தியாசாலையை 1900ஆம் ஆண்டில் ஆரம்பித்துப் பல பெரியார்களின் ஆதரவுடன் தமது இல்லத்தில் நடத்திவந்தார். அவர் நிறுவிய இவ் வித்தியாசாலை இன்று அடைந்துள்ள முன்னேற்றமான நிலைமை அப்பெரியாரின் பெருந்தகைமைக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது.

**மறுமலர்ச்சி :** பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் சிவபதமடைந்தபின் அவர்களது சுவீகார புத்திரராகிய பிரமஸ்ரீ அ. தியாகராசையர் அவர்கள் தாம் இவ் வித்தியாசாலையில் ஒரு ஆசிரியராகக் கடமையாற்றியபடியாலும் பொருளாதாரக் கஷ்டமிருந்தபடியாலும் இவ் வித்தியாசாலையைக் கொண்டு நடாத்த முடியாமல் இடர்ப்பட்ட தருணத்தில் இவ் வித்தியாசாலையின் பொறுப்புகளை ஏற்று ஐயரவர்களது நோக்கத்தைப் பாதுகாத்தவர், மகாஜனக் கல்லூரியை நிறுவியவரும், இவ் வித்தியாசாலையின் முகாமைக்காரர்



தலைமையாசிரியர்

**திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்**

அவர்களது தந்தையாரும், கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பேராசிரியருமாகிய உயர்திரு. தெ. அ. துரையப்பா பிள்ளை அவர்களேயாவர். இவரே இவ் வித்தியாசாலையை இப்பொழுதிருக்கும் இடத்துக்குக் கொண்டு வந்தவர். மடாலயம், சிவாலயம், வித்தியாலயம் முதலியவைகளைப் புதிதாகக் கட்டுபவர்களிலும் பார்க்க அவை பழுதுற்றிருக்கும்போது திருத்தியமைப்பவர்களுக்கு அதிகபலனுண்டாகுமென்று பெரியோர் கூறுவர். அதற்கமைய இவ்வித்தியாசாலையையும் தக்கதருணத்தில் ஏற்றுப் பாதுகாத்த பெருமையை நாம் என்றும் மறக்க முடியாது.

**இக்காலம் :** இப்பொழுது எங்கள் வித்தியாசாலையின் முகாமைக்காரராக இருப்பவர் உயர்திரு. தெ. அ. துரையப்பாபிள்ளையின் சிரேஷ்ட புத்திரரும், மகாஜனக் கல்லூரி அதிபருமாக விளங்கும் திருவாளர் தெ. து. ஜயரத்தினம், B.A. அவர்களேயாவர். இவர்கள் 1943ஆம் ஆண்டில் இவ்வித்தியாசாலையின் முகாமைக்காரர் பதவியை ஏற்று வித்தியாசாலை வளர்ச்சியடைவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மிகுந்த ஆராய்வோடு செய்தும், ஆசிரியர்களுக்கு வேண்டிய புத்திமதி கூறியும், மிக்க கவனத்துடனும் திறமையுடனும் கண்காணித்து வருகிறார்கள். தன்னலங் கருதாத் தகைமையாளரும் பன்னருங் குணக்குன்றுமாகிய இம் முகாமைக்காரரின் கீழ்ச்சேவை செய்யக் கிடைத்தமைபற்றி ஆசிரியர்களாகிய நாம் அகமிகமகிழ்கின்றேம். இவர்களது காலத்திற் பாடசாலையானது பெரிதும் முன்னேற்ற மடைந்து வருவது பின்னே காட்டப்படும் அட்டவணைகளைப் பார்க்கும்போது இனிது விளங்குவதாகும். இவ் வித்தியாசாலையில் இப்பொழுது கல்வி கற்பிப்பவர்கள் பதினொரு பேர். அவர்களின் பெயர்களும் தராதரங்களும் இம்மலரின் பிற்பகுதியிற் காட்டப்பட்டுள்ளன. அவற்றை ஆங்குக்காண்க. இவர்களுள் திரு. சி. செல்லத்துரை ஆசிரியர் அவர்கள் 1955ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் தேதி தொடக்கம் சிரேஷ்ட உதவியாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஏற்ற கடமையை ஒழுங்காகச் செய்து பாடசாலை வளர்ச்சிக்கு வேண்டிய உதவிபுரிந்து வருகிறார். அவர் வச்சிரவிழா மலர்ப் பத்திராதிபர் குழுவிலும் ஒருவராக இருந்து இம்மலர் சிறப்பாக வெளிப்படுவதற்கு வேண்டிய உதவிகள் புரிந்துள்ளார்.

ஏனைய ஆசிரியர்களும் பாடசாலை வளர்ச்சியிற் கருத்துடையவர்களாய்த் தம் மறிவைப் பெருக்கிக் கொள்வதிலும், தமது கடமையை ஒழுங்காகச் செய்வதிலும், புறவேலைகளாகிய இல்லப்போட்டிகள், சமயவிஷயங்கள், மாணவர் சங்கங்கள், சங்கீதம், நடனம், நாடகம் சேமிப்பு முதலியவற்றில் ஈடுபடுவதிலும் ஊக்கம் உடையவர்களாய் என்னுடன் ஒத்துழைத்துப் பாடசாலை வளர்ச்சிக்குப் பேருதவியாயிருக்கின்றனர். இவர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.


இப்பொழுது இடாப்பிலிருக்கும் மாணவர்கள் தொகை 348. இவர்களில் 146 பேர் ஆண்கள். 202 பேர் பெண்கள். பெண்களே கூடிய தொகையானோர் என்பது கவனிக்கத்தக்கது.

எமது வித்தியாசாலை காலை 8-50க்கு ஆரம்பமாகிறது. ஆரம்ப நேரத்தில் தேவார பாராயணமும் சிவபுராணம் ஓதுதலும் நடைபெறும். புதன் கிழமை தோறும் ஆசிரியர்களால் சில நிமிஷங்களுக்குச் சமயம், ஒழுக்கம், சுகாதாரம் முதலாய விஷயங்களில் போதனை செய்யப்படும். எல்லா வகுப்புகளுக்கும் முதற்பாடநேரத்தில் சமயபாடம் கற்பிக்கப்படும். கொழும்பு விவேகானந்த சபையார் நடாத்தும் சமயபாடப் பரீட்சையில் எமது பாடசாலையும் பங்குபற்றி வருகிறது. தோட்டவேலைக்குத் தகுதியான நிலவசதி நீர்ப்பாய்ச்சல் வசதியென்பன குறைவாக விருந்தாலும் எம்மாலியன்ற வரையிற் சிறு தோட்டம் அமைத்து மேல்வகுப்பிலுள்ள மாணவர்களை அவ் வேலையில் ஈடுபடுத்தி வருகிறோம்.

வீட்டுத் தோட்டங்களில் கூடிய கவனம் எடுக்குமாறு ஊக்கப்படுத்தி வருகிறோம். தேகப்பயிற்சி சுதேசவிளையாட்டுக்கள் முதலியவற்றிலும் மாணவர் பயிற்சி பெற்றுவருகின்றனர். மேல்வகுப்புகளில் உள்ள பெண் பிள்ளைகளுக்குப் பிற்கால வாழ்க்கைக்கு மிக உபயோகமான மனையியற்பாடம் தகுதிவாய்ந்த ஆசிரியர்களாற் கற்பிக்கப்பட்டு வருகிறது. க. பொ. த. வகுப்பிலுள்ள பெண்பிள்ளைகள் பரீட்சையில் அப்பாடத்துக்குத் தோற்றிச் சித்தியெய்திவருகிறார்கள். மனையியல் ஆய்கூடமொன்று நல்ல முறையிலமைப்பதற்கு அத்திவாரமிடப்பட்டிருக்கிறது. விரைவிற் பூர்த்தியடையுமெனஎண்ணுகிறேன். பெற்றோர்கள், அனுதாபிகள், கொடையாளிகள் அனைவரதும் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். இதுவரை பணம் உதவியவர்களுக்கும் இனிமேல் உதவுபவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

மாதமிருமுறை செவ்வாய்க்கிழமைகளில் ஆசிரியர் சங்கம் நடைபெறுகிறது. அக்கூட்டங்களிற் கற்பித்தல் முறைகளும், பாடசாலை ஒழுங்குகளும், பாடசாலை நடத்துவதில் ஏற்படும் கஷ்டங்களைத் தீர்க்கும் வழிகளும், பாடசாலையை முன்னேற்றம் அடையச் செய்யும் வழிகளும் ஆராயப்பட்டு வருகின்றன. சங்கீதம், நடனம், நடித்தல், கைவேலை, தையல்வேலை, சித்திரம் முதலியவற்றிலும் இயன்றவரையில் ஊக்கமெடுத்து வருகிறோம்.

மாதந்தோறும் கடைசி வாரத்தில் ஒருதினம் தொழில் மகத்துவ தினமாகக் கொண்டாடப்படுகிறது. அத்தினத்தில் வித்தியாபகுதியாரின் சுற்றுநிருபத்துக்கியைய மாணவர்கள் பலபகுதியினராகப் பிரிக்கப்பட்டு ஆசிரியர்களது மேற்பார்வையில் தோட்டவேலை, பன்னவேலை, தையல்வேலை, உணவு சமைத்தல், சித்திரம் சித்திரித்தல், சங்கீதம்பாடுதல், நம்பி, நடனம் பயிலல்



சிரேஷ்ட உதவியாசிரியர்
திரு. சி. செல்லத்துரை அவர்கள்

வளவுச் சுத்தம் கவனித்தல் முதலிய வேலைகளில் உற்சாகத்துடன் ஈடு பட்டு வருகின்றனர்.

அன்றுபிற்பகல் தொழில் மகத்துவம் சம்பந்தமான பேச்சுகள், பாட்டு கள், நடனங்கள் நடைபெறும். இந் நிகழ்ச்சிகள் யாவும் மாணவருடைய பிற்கால வாழ்க்கைக்குப் போதிய உதவியளிக்குமென்பது எமது நம்பிக்கை யாகும்.

வானெலியின் ஒலிபெருக்கியொன்று பாடசாலையில் அமைக்கப்பட்டிருக் கிறது. இன்னுங் காலத்துக்குக் காலம் மாணவர்கள் சுற்றுப்பிரயாணங் கள் செய்து தம்மறிவை விருத்தியாக்குவதற்கும் வேண்டிய ஒழுங்குகள் செய்து வருகின்றோம். மாணவர் சங்கங்கள், சமயாபிவிருத்திச் சங்கம், ஆங்கிலக் கல்வி விருத்திச் சங்கம், மத்தியானப் போசனச் சங்கம், பொருள் விநியோகச் சங்கம் முதலிய சங்கங்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவற்றின் விபரங்கள் பின்னே காட்டப்பட்டுள்ளன.

வலிகாமம் வடக்குத் தமிழாசிரியர் சங்கம் நடாத்தும் மூன்ரும், ஐந்தாம், ஏழாம் வகுப்புப் பரீட்சைகளுக்கும், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங் கம் நடாத்தும் எட்டாம் வகுப்புப் பரீட்சைக்கும், அரசினர் நடாத்தும் க. பொ. த. பரீட்சைக்கும் மாணவர்களை அனுப்பி வருகிறோம். பரீட்சைப் பெறுபேறுகள் பின்னே காட்டப்பட்டுள்ளன.

சுகாதாரப் பகுதியார் காலத்துக்குக் காலம் இங்குவந்து சுகாதார விஷயங்களைக் கவனித்து வருகிறார்கள். நாமும் அவர்களுடன் ஒத்து ழைத்து வருவதனல் சுகாதார வேலைகள் திருப்தியாக இருக்கின்றன.

**கடமைப்பாடு :** ஒருபாடசாலையைச் சிறந்த முறையில் நடாத்துவது, விழாக்கள் கொண்டாடுவது, மலர் வெளியிடுவது என்பன போன்ற காரியங்கள் இலகுவானவையல்ல. ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பு, விடாமுயற்சி பொருள்வசதி, மாணவர்களது ஒத்துழைப்பு, பெற்ரோர் பழையமாணவர் ஆகியோரது ஆதரவு, பெரியோர்களின் ஆசி ஆகியன இருந்தாற்ருன் இவை இனிது நிறைவேறும். எங்கள் பாடசாலைக்குப் பொருள்வசதி குறைவாக விருந்தாலும் ஆசிரியர்களது ஒத்துழைப்பும், விடாமுயற்சியும், பெரியோர் களது ஆதரவும், ஆசியும், மாணவர்களது ஒத்துழைப்பும், பெருமையைத் தந்துகொண்டேயிருக்கின்றன. எங்கள் வச்சிரவிழா மலரை இத்துணைச் சிறப்பாக வெளிவரச் செய்த பெருமை எமது பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும். இவர்கள் அனைவருக்கும் எமது அன்பான நன்றி உரியதாகுக.

இன்னும் எமது முயற்சிக்கு வேண்டிய ஊக்கத்தைத் தந்து பலவகையி லும் உதவி செய்த எமது முகாமைக்காரர், கட்டுரையாளர்கள், வாழ்த்து நல்கிய பெரியார்கள், பெற்ருேர்கள், பழையமாணவர் ஆகிய அனைவர்க்கும் நன்றி கூறி எனது அறிக்கையைப் பூர்த்தி செய்கின்றேன்.

# சைவப்பிரகாச வித்தியாசாலைச் சரித்திர அட்டவணைகள்

1952ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பொன் விழா மலரில் இவ்வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்ட வரலாறும், 1952 ஆம் ஆண்டு வரையும் வளர்ச்சியடைந்து வந்த வரலாறுகளும் விபரமாகக் காட்டப்பட்டுள்ளன. ஆதலால் இப்பொழுது வெளியிடப்படும் இவ் வச்சிர விழாமலரில் இவ்வித்தியாசாலையின் சரித்திரத்தைச் சில அட்டவணைகள் மூலம் காட்டுகின்றோம்.

1900ஆம் ஆண்டில், பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களால் ஷ வித்தியாசாலை அவரது இல்லத்தில் அமைக்கப்பெற்ற மண்டபத்தில்ஆரம்பிக்கப்பெற்றது.

1901ஆம் ஆண்டில் இவ் வித்தியாசாலை அரசினர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது.

1902ஆம் ஆண்டு வைகாசியில் வருடாந்தப் பரீட்சை முதன்முதலாக நடைபெற்றது.

1918ஆம் ஆண்டில் பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் சிவபதமடைந்தனர். பாடசாலைப் பொறுப்புகள் ஐயர் அவர்களின் சுவீகார புத்திரன் பிரமஸ்ரீ அ. தியாகராசையர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1921ஆம் ஆண்டில் ஷ வித்தியாசாலையின் சகல பொறுப்புக்களும் திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

1925ஆம் ஆண்டில் இவ்வித்தியாசாலை இப்பொழுது இருக்கும் நிலம் விலைக்கு வாங்கப்பட்டது.

1928ஆம் ஆண்டில் இவ்வித்தியாசாலை புதிதாக வாங்கப்பட்ட நிலத்திற்கு மாற்றப்பட்டது.

1929ஆம் ஆண்டிற் பாலர் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

1933ஆம் ஆண்டில் க. பா. வி. த. (J. S. C.) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1943ஆம் ஆண்டில் சி. பா. த. ப. (S.S.C.) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பெரிய மண்டப வேலை ஆரம்பிக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டு ஜூலைமாதம் பெரிய மண்டபத் திறப்புவிழா நடைபெற்றது.

1952ஆம் ஆண்டு பொன்விழாக் கொண்டாடப்பட்டது. பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களின் ஞாபகார்த்தமாகப் பாலர் பகுதிக்கட்டிடம் கட்டப்பட்டது. ஸ்ரீமான் மு. இராமுப்பிள்ளை அவர்களின் பொருளுதவியால் வாசிகசாலைக் கட்டிடம் கட்டுவிக்கப்பட்டது.

1953ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற் புதிதாக அரை ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுப் பாடசாலை வளவோடு சேர்க்கப்பட்டது.

1959ஆம் ஆண்டில் மனையியல் ஆய்கூடத்துக்கு அத்திவாரமிடப்பட்டது.

1960ஆம் ஆண்டு மே மாதத்தில் வச்சிர விழாக் கொண்டாடப்படுகிறது.

## முகாமைக்காரர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1900—1905 | பிரமஸ்ரீ | ச. கதிர்காம ஐயர் | அவர்கள் |
| 1906—1918 | ,, | க. செல்லையர் | ,, |
| 1919 | ,, | க. சிவஞானக் குருக்கள் | ,, |
| 1920 | ,, | வே. தியாகராசக்குருக்கள் | ,, |
| 1921—1923 | திரு. | தெ. அ. துரையப்பாபிள்ளை | ,, |
| 1924—1942 | ,, | கா. அருளம்பலம் | ,, |
| 1924—1942 | ,, | (கா. சின்னப்பா அவர்கள் உதவிமுகாமையாளர்) | |
| 1943—……… | ,, | தெ. து. ஐயரத்தினம் | அவர்கள் |

## தலைமையாசிரியர்கள்

| | | |
|---|---|---|
| 1900—1918 | பிரமஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் | அவர்கள் |
| 1919 | ,, க. நடராசையர் | ,, |
| 1919—1922 | திரு. S. இராசேந்திரம் | ,, |
| 1923—1926 | ,, V. முத்துலிங்கம் | ,, |
| 1927 | ,, யேக்கப் | ,, |
| 1927—1928 | பிரமஸ்ரீ க. நடராசையர் | ,, |
| 1928—1942 | திரு. அ. பரமசாமி | ,, |
| 1943—1944 | ,, க. நாகலிங்கம் | ,, |
| 1945—1947 | ,, அ. பரமசாமி | ,, |
| 6-11-47—8-6-48 | ,, தி. சுந்தரமூர்த்தி | ,, (பதில். த. ஆ.) |
| 9-6-48—31-1-52 | ,, து. ஐயாத்துரை | ,, |
| 1-2-52—5-1-55 | ,, செ. சிவசுப்பிரமணியம் | ,, (பதில். த. ஆ.) |
| 6-1-55 | ,, செ. சிவசுப்பிரமணியம் | ,, (த. ஆ.) |

## ஆசிரியர்கள் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1900—1931 | 5 | ஆசிரியர்கள் | 1950 | 8 | ஆசிரியர்கள் |
| 1932—1933 | 6 | ,, | 1951—1952 | 9 | ,, |
| 1934—1937 | 7 | ,, | 1953 | 10 | ,, |
| 1938—1942 | 5 | ,, | 1954 | 9 | ,, |
| 1943—1945 | 6 | ,, | 1955—1959 | 10 | ,, |
| 1946—1947 | 8 | ,, | 1960 | 11 | ,, |
| 1948—1949 | 7 | ,, | | | |

## மாணவர் தொகையும், வகுப்புகளும்

| ஆண்டு | மாணவர் தொகை | | கடைசி வகுப்பு | ஆண்டு | மாணவர் தொகை | | கடைசி வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1900 | 60 | வரையில் | V | 1937—1939 | 168 | ,, | க. பா. வி. த. |
| 1901—1902 | 95 | ,, | V | 1940—1942 | 162 | ,, | ,, |
| 1903 | 79 | ,, | VI | 1943 | 196 | ,, | சி. பா. த. ப. |
| 1904 | 85 | ,, | VII | 1944 | 200 | ,, | ,, |
| 1905 | 81 | ,, | VI | 1945 | 220 | ,, | ,, |
| 1906 | 82 | ,, | VII | 1946—1947 | 228 | ,, | ,, |
| 1907 | 101 | ,, | VI | 1948 | 232 | ,, | ,, |
| 1908—1909 | 72 | ,, | VII | 1949 | 251 | ,, | ,, |
| 1910 | 68 | ,, | VIII | 1950 | 278 | ,, | ,, |
| 1911 | 70 | ,, | VII | 1951 | 273 | ,, | ,, |
| 1912 | 68 | ,, | V | 1952 | 268 | ,, | ,, |
| 1913—1914 | 75 | ,, | V | 1953 | 278 | ,, | ,, |
| 1915 | 74 | ,, | VI | 1954 | 276 | ,, | ,, |
| 1916—1917 | 88 | ,, | V | 1955 | 305 | ,, | ,, |
| 1918 | 92 | ,, | VI | 1956 | 318 | ,, | ,, |
| 1919 | 129 | ,, | V | 1957 | 317 | ,, | ,, |
| 1920—1931 | 136 | ,, | VI | 1958 | 330 | ,, | ,, |
| 1932 | 161 | ,, | VII | 1959 | 355 | ,, | ,, |
| 1933 | 160 | ,, | க. பா. வி. த. | 1960 | 348 | ,, | ,, |
| 1934—1936 | 200 | ,, | ,, | | | | |

# அறிஞர் பகுதி

# சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆரம்பம்

★

வண்ணை - வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்
**திரு. ச. அம்பிகைபாகன், B. A. அவர்கள்**

**தெ**ல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் அறுபதாவது ஆண்டுவிழாக் கொண்டாடப்படும் இத்தருணத்தில் இவ்வித்தியாசாலையைத் தாபித்தவரையும், அதோடு சம்பந்தப்பட்டவர்களையும், நினைவு கூர்தல் அவசியம்.

இவ்வித்தியாசாலையைத் தாபித்த பிரமஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயர் பரம்பரையாகத் தமிழும் சைவமும் வளர்த்த குடும்பத்தில் தோன்றியவர். இவர் தந்தையாரான கதிர்காமையர் வடமொழி தென்மொழிகளில் நிரம்பிய புலமையுடையவராய்த் தமது சொந்தக் கிராமமாகிய புன்னாலைக்கட்டுவனில் ஒரு சைவ வித்தியாசாலையைத் தாபித்துச் சைவத்தையும், தமிழையும் வளர்த்து வந்தார். இதற்கு மேலாகத் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உயர்தர இலக்கண இலக்கியங்களையும், சமய சாஸ்திரங்களையும் போதித்து வந்தார். இவ்வாறாக இவரிடம் பாடங் கேட்டவர்களில் இவரின் சகோதரரின் புத்திரரான வித்துவ சிரோமணி கணேசையர் ஒருவராவர். கதிர்காமையர் அவர்களின் பேருழைப்பினாலேயே அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அவ்வூர்க் கிராமவாசிகளும் புராண படனத்தில் சிறந்த தேர்ச்சியுடையவர்களாய் விளங்கினர்.

சுந்தரமூர்த்தி ஐயர் அவர்கள் தெல்லிப்பழையில் விவாகஞ் செய்து அங்கு நிரந்தரமாக வாசஞ் செய்யத் தொடங்கியதும் அவ்வூரில் ஒரு சைவ வித்தியாசாலை இல்லாதிருப்பதைக்கண்டு வித்தியாசாலை யொன்றைத் தாபித்து நெடுங்காலமாகத் தலைமையாசிரியராக அமர்ந்து தமிழ்க் கல்வியையும், சைவ சமயத்தையும் வளர்த்து வந்தார். ஐயரவர்களின் தோற்றம் கண்டாரைப் பிணிக்குந் தகைமை வாய்ந்தது. உயர்ந்து பருத்த அவரது சரீரத்தில் எப்பொழுதும் சிவ சின்னங்கள் பொலிந்திருக்கும். அவர்களின் தோற்றமே சைவத்தின் சிறப்புக்கு ஒரெடுத்துக் காட்டாக விளங்கியதென்றால் அது மிகையாகாது.

ஐயரவர்களுக்கு உதவியாக இருந்தவர்களில் ஆறுமுகச் சட்டம்பியாரை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். இவர் புராணங்களிலும், திருமுறைகளிலும் நல்ல பயிற்சியுடையவர். மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். இவரது சாரீரம் மென்மையும் இனிமையும் வாய்ந்தது. இவர் திருமுறைகளை ஓதும் பொழுது கன்மனத்தையுங் கரைத்துவிடும். இவ்வித்தியாசாலையில் நெடுங்காலங் கற்பித்த இன்னுமொரு ஆசிரியர் செல்லப்பா ஐயர் என்பவராவர். இச் சைவவித்தியாசாலையைத் தாபித்த பெரியார் சமய வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டே அரும்பாடுபட்டுத் தாபித்தனர். இவ்வித்தியாசாலையிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சைவ சமயத்தை வளர்க்கும் இலட்சியத்தை முன்வைத்துத் தமது கடமைகளைச் செய்வார்களாக.

---

நாம் வாழ வேண்டும் என்பது அவசியமல்ல. வாழ்க்கைக்கு அப்பால் நம்முடைய பெயர் பொறிக்கப்படவேண்டும். —கேப்ரியல்ட்

# "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே"

## பண்டிதை த. அப்பாக்குட்டி அவர்கள்

(ஆசிரியை அளவெட்டி சதானந்த வித்தியாசாலை)

"ஒருமுருகா வென்றென்னுள்ளங்குளிர உவந்துடனே
வருமுருகா வென்று வாய் வெருவாநிற்பக் கையிங்ஙனே
தருமுருகா வென்று தான்புலம்பாநிற்பத் தையல்முன்னே
திருமுருகாற்றுப்படையுடனே வருஞ் சேவகனே"

என்று முருகப்பெருமானை வழுத்துகிறார்கள் பக்தர்கள். திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானின் பேரருட்டிறனைக் காட்டும் சங்க கால இலக்கியமாகும். பத்துப்பாட்டு என்னுஞ் சங்க நூலிலே முதலாவதாக அமைந்துள்ளது இதுவாகும்.

முருகவழிபாடு பழந்தமிழ் மக்களிடையே நிலவி வந்ததென்பதற்குத் தொல்காப்பியமே சான்று தருகிறது. நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவ்வவ் நிலத்திற்குரிய தெய்வங்களையும் காட்டியுள்ளார் தொல்காப்பியர். முல்லை நில மக்கள் மாயனையும், குறிஞ்சிநில மக்கள் முருகனையும், மருதநிலமக்கள் இந்திரனையும், நெய்தல் நில மக்கள் வருணனையும் பூசித்து வழிபாடாற்றினர் என்பதற்கும் பழைய தமிழ் இலக்கியங்களிலே இன்னும் பல சான்றுகள் உண்டு.

திருமுருகாற்றுப் படையைக் கடைச் சங்க காலத்துவாழ்ந்த நக்கீரனார் என்னும் பெரும் புலவர் இயற்றினார். "நெற்றிக்கண்ணைக் காட்டிய போதும் உன்பாடல் குற்றமே குற்றம்" என்று சிவபெருமானோடு வாதாடி அவருடைய சாபத்துக்கு ஆளாகியவர் நக்கீரர். இவர் முருகப் பெருமானிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவர். இதற்குச் சான்றாகவே திருமுருகாற்றுப்படை அமைந்துள்ளது. "இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" என்று மற்றொரு புலவனுக்குக் கூறி அவனை முருகப்பெருமானிடத்து வழிப்படுத்துகிறார் நக்கீரர். உள்நோக்கமாகப் பார்க்குமிடத்து எம்மனைவரையுமே முருகப்பெருமானிடத்து வழிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

முருகப் பெருமானுடைய அருளைப் பெற விரும்புவோருக்குத் திருமுருகாற்றுப்படை ஒரு வழிகாட்டியாகும். முருகப் பெருமானுடைய அருளை வேண்டி யாசிப்போருக்குச் சிறந்தவொரு தகுதி இருக்க வேண்டுமென்று காட்டுகிறார் நக்கீரர். அதாவது பெருமானுடைய அருளைப் பெறவேண்டும் என்ற விருப்பம் மனதிலே உண்டாவதுடன் அதற்கேற்ற நற்குண நற்செய்கைகளும் அமைந்திருக்கவேண்டுமென்பதாம்.

"சேவடி படருஞ் செம்மலுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

புலவனே! நீ முருகப் பெருமானை நோக்கிப் போகிறாயா? நல்ல காரியம். அவன் எழுந்தருளியிருக்கும் இடங்களையெல்லாம் அறியப் போகிறாயா? விரிவாகச் சொல்லுகிறேன். அங்கெல்லாஞ் சென்று அவனை வணங்கு. இல்லாவிட்டால் மனத்திலாவது துதி. நிச்சயமாக உனக்குச் சகல நலமும் கிடைக்குமென்று வாழ்த்துகிறார் நக்கீரர். இருளிலே இருப்பவனுக்குத்தான் வெளிச்சத்தைக்காண வேண்டுமென்ற விருப்பம் உண்டாகும். நக்கீரர் திருமுருகாற்றுப்படையைப் பாடியது இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலேயே என்க.

ஒரு முறை திருப்பரங்குன்றத்தை அடுத்துள்ள தடாகமொன்றில் நீராடிச் சிவபூசை செய்தார் நக்கீரர். தடாகக்கரையிலுள்ள ஓர் ஆலமரத்திலிருந்து ஒருபழுப்பு இலை பாதி நீரிலும், பாதிநிலத்திலுமாக விழுந்தது. நீரில் விழுந்த இலை மீன்வடிவு கொண்டது. நிலத்தில் விழுந்த இலை பறவை வடிவுகொண்டது. இரண்டும் தத்தம் பக்கமாக ஒன்றையொன்று இழுத்தன. நக்கீரருக்கு இச்செய்கை பேராச்சரியத்தைக் கொடுத்தது. இறைவனின் சிந்தனையிலிருந்து அவருள்ளம் வழுவியது. சிந்தனை வேறு செயல் வேறாகப் பூசைசெய்த குற்றத்தால் குகையில் அடைபட்டார் நக்கீரர். துன்பமாகிய இருள் அவரைச் சூழ்ந்து கொண்டது. உடனே அருளாகிய ஒளியைநாடினார். பொழுது விடிய உலகமே சந்தோஷமடைகிறதல்லவா? இங்கே துன்பமாகிய இருள்விடிவில் காணும் மகிழ்ச்சியை இயற்கை நிகழ்ச்சியிலே பதித்து ஆரம்பிக்கிறார்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி"

என்று கூறி அவரடைந்த மகிழ்ச்சியை நாமடைய வைக்கிறார். மாணிக்கவாசகரும் ஓரிடத்தில்,

"இன்றெனக்கருளி இருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்"

என்று பாடுகிறார்.

முதலில் ஒளி மகிழ்ச்சியைப் பற்றிப்பேசிய நக்கீரர் அடுத்ததாக ஆற்றுப்படுவோன் மனதிற் பதியும்படி தனக்குக் கிடைத்த பற்றுக்கோட்டை விளக்குகிறார்.

"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"

என்பது அது. இறைவனிடம் அணுகும் அன்பர்கள் தமக்குப் பற்றுக்கோடாகிய தாளையே கண்டு இன்புறுவார்கள். "நின்னிற் சிறந்த நின்றாளிணையவை" என்று பரிபாடல் காட்டுகிறது. பகைவர்களை அழிக்கும் தன்மைவாய்ந்த கரங்கள் பெருமானிடம் உண்டு என்பதனாலேயே தமது துன்பம் ஒழிதற்காக அவன்தாளை அடைகிறார்கள் அடியார்கள்.


வழிப்படுத்தப்படும் புலவனுடைய மனதிலே பதியும் படியாக முருகப்பெருமானை அறிமுகஞ் செய்து வைக்கிறார். ஒரு சோதிவடிவு, கால்கள் அடியவர்களைத் தாங்குமியல்பின, கைகள் பகைவர்களை அழிக்குந்தகைமையின, பக்கத்திலே தெய்வயானையம்மையார் வீற்றிருக்கின்றார், மார்பிலே கடப்பமாலை அசைகிறது. இத்தகைய காட்சிகளோடு முருகப்பெருமான் வீற்றிருக்குமிடம் திருப்பரங்குன்றமாகும். அங்கே சென்று நீ முருகனை வணங்கு. அல்லாவிட்டால் இன்னுமுண்டு கேள்; என்று கூறித் திருச்சீரலைவாயை இரண்டாவதாகக் காட்டுகிறார் புலவனுக்கு. திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூர். இங்கே முருகன் ஆறுமுகங்களோடும் பன்னிரு கரங்களோடும் விளங்குகின்றான் என்பதைக் கூறுகின்றார்.

"மங்கள மகிமை மாநகர்ச் செந்தியில் வந்துறை பெருமாளே" என்பது திருப்புகழ். செந்திற் பெருமானிடமிருந்து கிடைக்கும் மங்கலங்களையும் அருளையும் முறைமுறையாகக் காட்டிப் புலவனைத் தட்டிக்கொடுத்து மூன்றாவதாகத் திருவாவினன்குடியைக் காட்டுகின்றார். அங்கு முனிவர்கள், தேவர்கள், கந்தருவர்கள் வழிபடுங்காட்சி கூறப்படுகின்றது அடுத்து திருவேரகம் என்ற பகுதியிலே முருகன் உறையும் பண்பினைக்கூறி ஐந்தாவதாகக் குன்றுகள்தோறும் முருகன் எழுந்தருளியிருக்குந் தன்மையினை எடுத்துக்கூறுகிறார். குறிஞ்சி நிலத்திலே முருகன் கோயில்கொண்டருளியிருக்கிறான் என்பது பழந்தமிழர் கொள்கை. குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமும். இப்பகுதியில் வாழ்பவர்கள் வேடர்கள். முருகன் வேடர்களின் வழிபடுதெய்வம். வேடர்கள் அநாகரிகமானவர்கள். அதற்கான வழிபாடுதான் அவர்களுடைய வழிபாடு. வேலனுடையவெறியாட்டும், வேடரின் களிபாட்டும் அங்கே காணப்படும். குறிஞ்சி நிலத்துக்குரிய தொண்டகப்பறை முழங்கும். அதற்கேற்பக் குரவைக் கூத்தைப் பெண்கள் ஆடுவர். ஆடுதற்கேற்ப முருகனும் குன்று தோறுஞ் சென்று விளையாடுவன். இப்படியாகக் குன்றுதோறும் ஆடலைச் சொல்லி இறுதியில் முருகன் உறையும் பழமுதிர் சோலையை விளக்குகிறார்.

ஒரு அரசனைக்காண வேண்டுமாயின் குறிப்பிட்ட ஒரு இடத்துக்கே போகும்படி வழிப்படுத்துவர். ஆனால் இங்கே அவ்வாறு இல்லாமல் ஆறு சிறப்பான இடங்களைக்கூறி அங்கே போக முடியாவிடில் ஊரிலே நடக்கும் விழாக்களில் முருகனைத் தரிசிக்கலாம் அதுவுங்கிடையாவிடில் ஆர்வலர் ஏத்தும் நிலையிலும் அவன் காட்சி கொடுப்பான். அதுவுமின்றேல் வெறியாடுகளத்திலே அவனைக்காணலாம். இப்படியாக எங்கே கண்டாலும் அங்கே வணங்கித் துதிப்பாயானால் உனக்கு நல்லருள் கிடைக்கும் என்று புலவனுக்கு அறிவுறுத்துகிறார். முருகப்பெருமானிடம் தான் எத்தன்மையான பேரருள் பெற்றாரோ அத்தன்மையான பேரருளை உலகமும் பெற்றுய்ய வேண்டும் என்பதையே நக்கீரர் விரும்புகிறார். இதுதான் உண்மையடியார்களின் இயல்பு.

"நாள்என் செயும் வினைதான் என்செயும் எனைநாடிவந்த
கோள்என் செயும் கொடுங்கூற்றென்செயும் குமரேசர் [இரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்குமுன்னேவந்து தோன்றிடினே"

என்று வாயாரவாழ்த்தி முருகப் பெருமான் பாத கமலங்களை நினைவோமாக.



ஆசிரியர்கள்

# பழைய மாணவர் பகுதி

## "எனது அரிய அன்னை"

### திரு. அ. சரவணமுத்து அவர்கள்

( இளைப்பாறிய பெரும்பகுதி வித்தியாதரிசியும் பழைய மாணவரும் )

நானும் எனது அரிய அன்னையும் ஒரே ஆண்டில் (1900ஆம் ஆண்டு) பிறந்தோமென்றால் நீங்கள் அதிசயப்படக்கூடும். அவள்தான் என் கல்வி அன்னை. என்னுடைய அத்திவாரக்கல்வியை இட்டவள். என்னுடைய முதல் ஞாபகத்தில் தோற்றமளிக்கின்றவர் அவளுடைய தந்தையாராகிய ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயர் அவர்களாவர். அவரது பொலிவான தோற்றமும், அந்தணர்க்குரிய ஆசாரங்களும், திருநீற்றுப் பொலிவும் எனது மனத்தைவிட்டு அகலவே மாட்டா. அடியைப் போல் அண்ணன்தம்பி உதவார் என்பதை நன்றாய்க்கடைப்பிடித்து ஒழுகினவர் பிரம்மஸ்ரீ து. செல்லையா ஆசிரியர் அவர்கள். அவருடைய பிரப்பம் பழங்களை உருசி பாராதவர் யார்? இலங்கைப்படத்தில் வரிசைவரிசையாகப்படித்த மலைகளையும், ஆறுகளையும் இன்னும் மறந்துவிடவில்லை.

இன்பமான காட்சிகள் பள்ளிக்கூடம் போகும் பொழுதும் திரும்பும் பொழுதுமே நிகழ்கின்றன. போகிற வழியில் "கம்பனி" என்ற ஓர் பெரிய வளவு உண்டு. அங்கே விளா, புளி, மா முதலிய மரங்கள் ஏராளமாயிருப்பது சிறந்தவோர் காட்சியாகும். அந்தக் காலத்தில் இம்மரங்களுக்குக் கல்லெறியாத மாணவர்கள் மிகச் சிலரென்றே கூறலாம். பூ, பிஞ்சு, காய், பழம் இவைகள் ஒன்றையும் மரங்களில் விடமாட்டார்கள். வளவுக்காரர் வந்துவிட்டால் யாவரும் ஒரே ஓட்டம். வெயிற் காலத்தில் நல்ல நிழலையும், கனிகளையும் கொடுத்து உதவிய இம்மரங்களை யார்தான் மறப்பார்,

இந்த வளவுக்குப் பக்கத்திலிருக்கின்ற வெள்ளவாய்க்கால் வழியாகத்தான் பல பிள்ளைகள் வீட்டுக்குச் செல்லவேண்டும். சொற்ப மழை பெய்தால் வெள்ளம் கலக்குவதில் ஓர் ஆனந்தம். பெரிய மழை யென்றால் வாய்க்கால் வழியே போக முடியாதென்று விடுதலைதான். அந்தநாளும் வந்திடாதோ என்று பல முறையும் நினைப்பதுண்டு.

அறுபது ஆண்டுகள்சென்றுவிட்டன. நான் முதுமைப்பருவம் அடைந்து உற்சாகம் குன்றி வருகின்றேன். ஆனால் எனது அன்னையோ இளங்கன்னிகையாகத் திகழ்கின்றாள். அவள் தன்னகத்தில் முந்நூற்றுநாற்பத்தெட்டுப் பிள்ளைகளையும், பதினொரு ஆசிரியர்களையும் கொண்டிருக்கின்றாள். இன்னும் அவளுடைய ஆயிரக்கணக்கான வளர்த்தபிள்ளைகள் இலங்கையிலும், வெளியூர்களிலும் பலதுறைகளில் நாட்டு நலனுக்காக உழைத்து வருகின்றார்கள்.

ஆங்கில மாதைப்போல் எனக்கு மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் வேண்டாமென்று சொல்லுகின்றாள். என்னுடைய சிறு பிள்ளைகள் ஓடிவிளையாட விசாலமான கட்டடங்கள், விளையாட்டுமைதானங்கள், காய்கறிப் பூந்தோட்டங்கள், வாழ்க்கைக்குரிய கல்விபெற விஞ்ஞான சாஸ்திர கூடங்கள், தொழிற்சாலைகள் கொடுத்தாற் போதுமென்று திருப்தியடைகின்றாள். ஆங்கில மாதுக்கும் தனக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கின்றாள். ஆங்கில மாதும் இப்பொழுது தேசிய நடை உடை பாவனைகளைக் கைக்கொண்டிருக்கிறாள். அரசாங்கமும் மனித சமுதாயமும் ஏன் இக்காலத்தில் ஆங்கில மாதுக்குப் பெருந்தொகையான நன்

கொடையும் அதிக மரியாதையும், வேறு பல சலுகைகளும் கொடுக்கிறார்களென்று ஆச்சரியப்படுகின்றாள். பிள்ளைகளுக்குக் குறைந்த சன்மானங்காட்டுவதோடுமில்லாமல் சுவபாஷா ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளங்கொடுத்து ஓர் பிரிவினையை உண்டாக்குகிறார்களே என்று வருந்துகிறாள். இலங்கை சுதந்திரமடைந்தும் பத்து வருடங்களுக்குமேற் சென்றுவிட்டன. இதைப்பற்றிக் கவனிப்பார் யாருமில்லையென்று மிகக் கவலைப்படுகின்றாள்.

கல்விப்பருவம் வாழப் பயிற்சிபெறும் பிராயம் என்று கூறுகின்றாள். நாட்டின் பொது வாழ்விற்குப் பல துறைகளிலும் தேவையான மனிதத்திறமையை ஏற்படுத்தித் தருவதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டுமென்றும் பறை சாற்றுகின்றாள். ஒவ்வொரு தொழிலும் மேன்மையானதே என்ற கொள்கை ஏற்பட்டு அவைகளுக்கு வருவாயும் ஏறைக்குறைய சம அளவில் இருக்கவேண்டுமென்றும் விரும்புகின்றாள். மூளைக்குப் பயிற்சிதரும் அதே சமயத்தில் தொழில்மூலம் கல்வி கற்பித்தால் அதிகபலனைத் தனது பிள்ளைகள் பெறலாமென்றுங் கருதுகின்றாள். ஆடம்பர வாழ்க்கைக்குப் பொருள் வேண்டாமென்றும், தனது பிள்ளைகள் நுட்பத் தொழிற் கலைகளைக் கற்பதற்குச் சகல உபகரணங்களுடன் சிறந்த தொழிற்சாலை யொன்றைப் பாடசாலைக்கணித்தாய் அமைத்தால் அதுவே பெரிய நன்றியாகுமென்றும் பிரார்த்திக்கின்றாள். கடவுளில் அன்பு வைத்து அவரை நாள்தோறும் தியானித்து வந்தால் தன்னுடைய நல்லகாலமும் சீக்கிரத்தில் வருமென்ற முழு நம்பிக்கையுடன் தோற்றமளிக்கின்றாள். அவளுக்கு என்ன கைமாறு செய்வோம்.

---

## நன்றாகச் சிரியுங்கள்

### (தெல்லியூர்ச் சிவானந்தன்)

மனிதன் பிறக்கும்போது அழுகின்றான். இறக்கும் போதும் அழுகின்றான். இடையில் சிரிக்க முயல்கின்றான். ஒருமுறை நன்றாகச் சிரிப்பதற்கு அவன்படும் கஷ்டங்களோ மிகப் பல. குழைந்தைகள் சிரிக்கின்றன; கவலையில்லாத கள்ளங்கபடமற்ற சிரிப்பு; பொறுப்பற்ற சிரிப்பு; தெள்ளியசிரிப்பு. வளர்ந்தோர்களாகிய எம்மால் அப்படிச் சிரிக்கமுடியவில்லை. ஏன் முடிவதில்லை? கள்வன் சிரிக்கிறான். இரவு அவனுக்கு நல்ல வருமானம். ஆனால் அதே நேரத்தில் இன்னொருவன் அழுகிறான்; அவன் பொருளைப் பறிகொடுத்தவன். அதிகாரி சிரிக்கிறான்; குறிப்பிட்ட வேலையைக் குறைந்தநேரத்தில் செய்துமுடிப்பித்ததில் அவனுக்கு மகிழ்சி. ஆனால் தொழிலாளி அழுகிறான்; பாவம் ஓய்வில்லாதவேலை அவனுக்கு. ஒருவனது சிரிப்பு மற்றவனுடைய அழுகையில் தங்கியுள்ளது. அப்படியான சிரிப்பு நல்லதா? ஞானி சிரிக்கிறார்; அவருக்கு செபத்தில் ஏற்பட்ட மன அமைதி உதட்டில் சிரிப்பை உண்டாக்குகின்றது. அது தெய்வீகம் கலந்த சிரிப்பு; ஆன்மாவை ஈடேற்றும் சிரிப்பு. அந்தச் சிரிப்பு யாரையும் வருத்தவில்லை. இவற்றால் எமக்கு ஒன்று புலனாகின்றது. உள்ளத்தில் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளனவானல் அந்தச் சிரிப்பை நன்றாகச் சிரிக்கலாம். அதுதான் குழந்தைச் சிரிப்பு. குழந்தைச் சிரிப்புச் சிரிக்க எம்மால் முடிவதில்லை. உள்ளத்து எண்ணங்கள் உயர்வுள்ளனவாய் இருப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அனுமதி தரமறுக்கின்றன: மனிதன் தனது தேவைகளைக் கூட்டிக்கொண்டேவருகின்றான். தேவைகள்கூடக்கூட வருமானம்தேவைப்படுகிறது. பெறுவதற்கு வழி கிடைப்பதில்லை. பொறாமை, வஞ்சகம், பொய், களவு, சூது முதலிய பாவங்கள் வளருகின்றன. எண்ணங்கள் எங்கு பிறக்கின்றன? கள்ளங்கபடமற்ற பரந்த நிலையான உள்ளத்திலிருந்தே அவை பிறக்கமுடியும். உலகில் உயிருள்ள எல்லாம் எண்ணுகின்றன. பசு கன்றைக் காணவில்லை என்று எண்ணிக் கத்துகிறது. காகம் மாலைக் காலத்தை எண்ணிக் கூட்டை அடைகிறது. எனவே எண்ணங்கள் எங்கும் பிறக்கின்றன.

நாம் வேண்டுவது நல்லெண்ணங்கள். அவை எங்கும் பிறந்துவிட முடியாது. அமைதியான பரந்த உள்ளத்திற்றான் அவை தோன்ற முடியும். இரவில் எண்ணற்ற நட்சத்திரங்கள் ஆகாயத்தில் தோன்றுகின்றன. உலகில் எத்தனையோ கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஒருவருடைய முகம்போல் மற்றவருடைய முகம் இல்லை. மக்களின் குரலும் அப்படியே. இப்படியான படைப்புகளை ஏற்படுத்தச் சக்தியொன்று வேண்டும். அதுதான் கடவுள். அவரைக் காட்ட முடியுமா? கண்டவர்கள் சொன்னதில்லை. சொன்னவர்கள் கண்டதில்லை. அந்தச் சக்தியில் நம்பிக்கை பிறக்குமானால் ஆங்கு அமைதியும் பரந்த நோக்கும், மனச்சாட்சிக்குப் பயமும் ஏற்படுகின்றன. இப்படியான உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் நல்லெண்ணங்கள். அவை அழிவதில்லை. உலகுக்கு நற்பயனைத் தருகின்றன.

நெருங்கிய உலகில் நெருங்கிய எண்ணங்கள் தோற்றுகின்றன. எல்லாரும் மனிதர்கள்; எல்லாரும் ஒரே இனம்; "யாதும் ஊரே யாவரும் கேளிர்". இந்த நிலைமை உண்டாக வேண்டும். "என்னிடமுள்ள பணம் ஏழைகள் சிந்திய வேர்வை" என்கிற காண்டேகர் வார்த்தையைப் பணக்காரர்கள் உணர முடியுமானால் ஏழை பணக்காரன் என்கின்ற ஏற்றத் தாழ்ச்சி குறையும். பச்சைக் கண்ணாடி போட்டிருப்பவன் உலகத்தைப் பச்சையாகக் காண்கிறான். வெற்றுக் கண்ணால் பார்ப்பவன் உண்மையான உலகைக் காண்கிறான். எந்த விடயத்திலும் உண்மை நிலையை உள்ளத்து உயர்வெண்ணத்துடன் நோக்கினால் விளங்கும். அப்பொழுது சமாதானம், அன்பு, அமைதி ஆறுதல் ஏற்படும். அவ்வேளையில் நாம் சிரிக்கலாம். அந்தச் சிரிப்புக் குழந்தைச் சிரிப்பு; அதில் கள்ளமில்லை; கபடமில்லை; வஞ்சம், பொறாமை எதுவுமே இல்லை,

உலக மக்களெல்லாரும் சமம் என்ற உயர்ந்த எண்ணமும், யான் - எனது என்ற அகந்தை மமதை அழிந்த நிலையும், பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பட்ட நிலையும் ஏற்பட்டால் உள்ளத்துள்ளவை தெல்லாம் உயர்ந்தனவாயிருந்தால் சிரிக்கலாம். இறக்கும்போதும் சிரிக்கலாம். இப்பொழுது சிரியுங்கள். அந்தச் சிரிப்பில் இன்பமுண்டு. துன்பமில்லை. நன்றாகச் சிரியுங்கள்!

---

வெற்றி பெறவேண்டும் என்னும் உங்களுடைய திடமான எண்ணந்தான் வேறு எந்த ஒரு காரியத்தையும் விட மிக மிக முக்கியமானது. —**ஆபிரகாம் லிங்கன்.**

★ ★ ★

கடமையும் உரிமையும் ஒன்றோடொன்று இணைப்பானவை. கடமையின்றி உரிமையில்லை. உரிமையோடு ஒட்டியிருப்பதுதான் கடமை. கடமை அத்திவாரம். உரிமை அதன்மேல் எழுப்புகிற கட்டிடம்.

—**இராஜாஜீ**

★ ★ ☆

மக்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள உதவும் நல்ல முறைகள் பலவற்றுள் ஒன்று கலையாகும். சச்சரவுகள் ஏதேனும் இருந்தாலும் அவைகளைப் புறக்கணித்து மனப்பூர்வமாகப் பழகுவதற்கு இது உதவுகிறது. —**ஜவகர்லால் நேரு**

★ ☆ ★

சித்திரமும் கைப்பழக்கம். செந்தமிழும் நாப்பழக்கம். வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்.
—**ஔவையார்**

# பாடசாலை மாணவர் பகுதி

## "எனது வெள்ளை இராணி"

எங்கள் வீட்டுக்குக் கிட்ட ஒரு மதகு இருந்தது. அங்கே காகங்கள் கத்தின. நான் போய்ப்பார்தேன். ஒரு வெள்ளை நாய்க்குட்டி கத்திக்கொண்டு இருந்தது. அப்பாவிடம் ஓடினேன். நாய்க்குட்டியைப் பிடித்துத் தரும்படி கேட்டேன். பிடித்துத் தந்தார். வெள்ளை இராணி என்று பெயர் வைத்தேன். தங்கைக்குக் கொடுக்கும் பால் அதற்குங் கொடுப்பேன். வளர்ந்து சோறு தின்னத் தொடங்கியது. யாரைக்கண்டாலும் குரைக்கும். என்னைக் கண்டால் வாலை ஆட்டும். தொங்கிப்பாயும். ஒருநாள் காலை குரைத்து என்னை எழுப்பியது. எழுந்து பார்த்தேன். அது வாழைத்தோட்டத்துக்கு ஓடினது. நானும் போனேன். மூன்று குட்டிகள் கிடப்பதைக்கண்டேன். குட்டிகளை வீட்டுக்கு எடுத்து வந்தேன். எனது வெள்ளை இராணி குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கிறது. நான் பள்ளிக்கூடத்திலிருந்து போனதும் அவைகளுடன் விளையாடுவேன்.

**க. கனகதயாளன்,**
II ஆம் வகுப்பு.

---

## "எனது யுத்த வீரன்"

நானும் தங்கை கமலாவும் விளையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் அப்பா ஒரு பெட்டியுடன் வந்தார். ஓடிச்சென்று பெட்டியைப் பார்த்தோம். இரண்டு கோழிக்குஞ்சுகள் இருந்தன. அப்பா ஒன்றை எனக்கும் மற்றதைக் கமலாவுக்கும் கொடுத்தார். நன்றாக வளர்க்கும்படிசொன்னார். நல்ல உணவு கொடுத்து அவற்றை வளர்த்தோம். ஒருநாள் அடுத்தவீட்டுக் கோழியொன்று இறந்துவிட்டது. நாங்கள் அதைக்கண்டு பயந்தோம். எனக்கு நல்லகாலம். என் கோழிக்கு வருத்தம் வரவில்லை. கமலாவின் கோழி வருத்தத்தினால் இறந்தது. என்கோழி நன்றாக வளர்ந்து அழகாக இருந்தது. ஒருநாள் மாமா எங்கள்வீட்டுக்குவந்தார். கோழியைக் கண்டு தனக்குத்தரும்படி கேட்டார். நான் கொடுத்துவிட்டேன். எனது சேவலுக்குப் போர்செய்யப் பழக்கினர். பல இடங்களில் என் கோழி சண்டையில் வெற்றியடைந்தது. அதற்கு நான் யுத்த வீரன் என்று பெயர் வைத்திருக்கிறேன்.

**க. தயாளகேசரி**
III ஆம் வகுப்பு.

---

## "உண்மை தந்த பரிசு"

எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் கடற்கரை உண்டு. ஒருநாள் மாலை நானும் சந்திரனும் மணலில் விளையாடிக்கொண்டிருந்தோம். சிப்பி, ஊரி முதலியவற்றைப் பொறுக்கினோம். அப்பொழுது என் கையில் ஏதோ சிக்கியது. எடுத்துப்பார்த்தேன். அது ஒரு தங்கச் சங்கிலி. அது பளிச்சுப் பளிச்சென்று

மின்னியது. எங்களுக்கு அப்போது மிகுந்த மகிழ்ச்சி உண்டாயது. அந்த நேரம் "பூம்பூம்" என்ற சத்தத்துடன் மோட்டார் வண்டி யொன்று பக்கத்தில் வந்து நின்றது.

அதிலிருந்து ஒரு சிறுமியும் தகப்பனும் இறங்கினார்கள். மணலில் எதையோ இருவரும் தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கச்சங்கிலியைத்தான் தேடுகிறார்கள் என்று நினைத்து அவர்களிடம் கேட்டோம். சங்கிலியை இழந்துவிட்டதாகக் கூறினார். நாங்கள் சங்கிலியைக் கொடுத்து நடந்ததைச் சொன்னோம். உண்மை கூறியதற்காக இருபத்தைந்து ரூபாய் கொடுத்தார்கள். எங்கள் தாயாரிடம் நடந்ததைச் சொன்னோம். உண்மை பேசியதனாலேயே இப்பணம் உங்களுக்குக்கிடைத்தது. உண்மை பேசுவீர்களானால் இதுபோன்ற பல நன்மைகள் கிடைக்கக்கூடும் என்று சொல்லித் தாயார் புகழ்ந்தார். உண்மை உயர்வு தரும்.

ந. மங்கையர்க்கரசி
IV ஆம் வகுப்பு

---

# வாத்தின் கர்வ பங்கம்

ஒருநாள் ஒரு முயல் பூந்தோட்டமொன்றிற்குள் சென்றது. அங்கே செல்பவர் இருப்பதற்கு அநேக வாங்குகள் போடப்பட்டிருந்தன. அவைகளுக்குச் சிவப்புநிற மை அன்று பூசப்பட்டிருந்தது. அந்த நிறம் ஈரமாக இருந்தமையினால் ஈரவர்ணம் என்று அட்டைகளில் எழுதி ஒவ்வொரு வாங்கிலும் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆனால் ஒரேயொரு வாங்கிற்கு மட்டும் வர்ணம் பூசப்படவில்லை. முயல் அந்தவாங்கில் உட்காரப்போகும் சமயத்தில் ஒரு வாத்தும் அங்கே வந்தது. அதனைக்கண்ட முயல் தனக்குப் பக்கத்தில் வந்து இருந்துவிடுமே என நினைத்து ஈரவர்ணம் என்று எழுதிய அட்டை யொன்றை எடுத்துக்கொண்டுவந்து மை பூசாத வாங்கில் கட்டிவிட்டு நித்திரைசெய்வது போல் பாசாங்கு செய்தது. அவ்விடம் வந்த வாத்து மைபூசப்பட்ட வாங்கில் இருந்து கொண்டு முயலைப்பார்த்து ஓ! முயலாரே நீர் பெரிய முட்டாள் என்பது வெளிப்படை. எழுத்துக்கூட்டிப் படிக்கவும் தெரியாதா? என்று சொல்லிக் கேலிசெய்தது. அப்பொழுது முயல் விழித்துப் பார்த்து ஓ தெரியுமே! அதனால்தான் இந்த அட்டையை நீ இருக்கும் வாங்கிலிருந்து எடுத்து வந்து இங்கே தூக்கியிருக்கிறேன் என்றது.

இதனைக் கேட்ட வாத்து திடுக்கிட்டு எழுந்திருக்கப் பார்த்தது. ஆனால் பூசிய வர்ணம் ஒட்டிக் கொண்டது. அதனால் எழுந்திருக்க முடியவில்லை. இதனைக் கண்ட முயலார் விழுந்து விழுந்து சிரித்திருப்பார் என்பதைப் பார்க்கவும் வேண்டுமா?

செ. திருவேல்
V ஆம் வகுப்பு

---

# அண்ணலும் ஒளவையும்

பொலிவு பெற்ற முகத்துடன் மயில்மீதேறிக் காட்சியளிப்பவன் நம் அண்ணல் முருகன். தளர்ந்த நடையும் ஊன்றுகோலும் உடையராய் முதிர்ந்த அறிவுடன் ஞானத் தமிழ்க் கடலென்று நாடு புகழ விளங்குபவர் நம்

ஔவைப் பிராட்டியார். ஔவையார் பிறந்தவுடன் அவர் அன்னையுந் தந்தையும் விட்டுப்பிரிய மனமிலராய் வருந்தியபோது,

"எவ்வுயிருங் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ" என்னும் முதலையுடைய வெண்பாவைப் பாடினர். அப்பொழுது அவர்கள் துன்பம் நீங்கி அவ்விடம் விட்டகன்றனர். பிறந்த உடனேயே ஞானம் பெற்றவரல்லவா ஔவைப்பிராட்டியார். சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரையும் நன்கு அறிந்தவர் ஔவையார். அவர்களால் நன்கு மதிக்கப்பட்டவர். ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்னும் நீதி நூல்களை ஆக்கி நமக்கு வழிகாட்டியாக இருக்கின்றனர்.

பண்டைக்காலத்துப் பெண்களுள் பெண்மை விளங்கச் செம்மை நெறியுடன் விளங்கிய நம்பாட்டி அண்ணல் முருகனிடம் தோல்வியடைந்தார். பல புலவர்களையும் வென்ற ஔவையாருக்கு சிறிது கர்வமும் இருந்தது. அவரது கர்வத்தை அடக்க நினைந்த வடிவேல் முருகன் மாடுமேய்க்கும் சிறுவனுடைய வடிவம் பூண்டு ஔவையார் வரும் வழியில் ஒரு நாவல் மரத்தில் நின்றனர். மரநிழலில் களைப்பாறிய ஔவையார் மரத்தில் நிற்கும் சிறுவனைக் கண்டார். சில பழங்கள் தரும்படி கேட்டார். உடனே அண்ணல் "சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என்று கேட்டனர். சுட்ட பழம் வேண்டுமென்றனர். அறக்கனிந்த பழங்களைப் பிடுங்கி மணலிற் போடுகின்றான் சிறுவன். மணல் போக ஊதி ஊதி வாயிற் போடுகின்றனர் ஔவையார். பாட்டி பழம் நன்றாகச் சுடுகின்றதா? என்று இடைச்சிறுவன் கேட்டான். மாடு மேய்க்கும் சிறுவனிடம் தோல்வியுற்றேன் என்று வெட்கித் தலை குனிந்த ஔவையார் வாயிலிருந்து,

கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் — பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்குயான் தோற்றது
ஈரிரவுந் துஞ்சா தென் கண்.

என்னும் பாடல் வெளிவந்தது. அவ்விடத்தினின்றும் அண்ணல் முருகன் மறைந்தருளினர். அப்பொழுதுதான் ஔவையார் முருகக்கடவுளே இடைச்சிறுவனாக வந்து தன் கர்வத்தை அடக்கினன் என்று மகிழ்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

**க. சி. மகாலிங்கம்**
VI ஆம் வகுப்பு

---

# முத்தோ அரும்போ

மக்களை மகிழ்விக்கும் மாலை நேரம். மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று லாவும் கடற்கரை. கடலில் தென்றல் தவழ்கின்றது. அலைகள் சோ என்ற இரைச்சலுடன் கரைபுரண்டோடுகின்றன.

இந் நேரத்திலே மடவார் சிற்றில் இழைத்து விளையாடி மகிழ்கின்றனர். கடல் அலைகள் பொறாமை கொண்ட பகைவர்கள்போல் மடவார் சிற்றில்களைச் சிதைத்து விடுகின்றன. பொங்கிய கோபத்துடன் தங்குறைகூற அன்

னையர்பால் செல்கின்றனர் அம்மட வார். அன்னார் செல்லும் வேகத்தால் அவர் அணிகலன்களாம் முத்தாரங் கள் உகுகின்றன. இதனை இம்மடவார் பொருட்படுத்தினார்களா? இல்லை. என்னே! இவர்தம் செல்வம்.

இத்தகைய மடவார் வாழும் பொன்நகரம் பூவுலகில் உண்டா? ஆம். அதுதான் புன்னை மரங்கள் பொலிந்து தோன்றும் புகார் நகரம். பூமகளும் நாமகளும் மகிழ்ந்து வாழும் பொன் நகரம். இப் பொன்நகரம் மக்களை மய க்கி விடுகிறது. மக்கள் மயங்குவதால் மந்திரவாதிகள் வாழும் மாநகரோ வென மயங்கவேண்டா. ஈங்குள்ள புன்னை யரும்புகள்தான் மந்திரவாதி கள். எப்படி?

மடவார் உகுந்த வெண்முத்தங் கள் எங்கே? அலையும் தரையிற் றனே. புன்னையரும்புகள் எங்கே? அலையும் தரையிற்றன். இந்த இடம் தான் போவாரைப் பேதுறுக்கும் இடம். புன்னையரும்பா அன்றி வெண்முத் தமா என்று மக்கள் மனம் பேதலிக் கின்றனர். மக்களைப் பேதலிக்கச் செய் வது எது? இரண்டின் நிற ஒற்றுமை யன்றே. விலைபெறப்பெற்ற வெண் முத்துக்களைப் புன்னையரும்புகள் எனப் புறக்கணிக்கலாமா? பசியுள்ளவன் தானே உணவை விரும்பித் தேடிச் சாப்பிடுவான். தாகமுள்ளவனுக்குத் தானே தண்ணீர் அருமை தெரியும். வெயிலில் நின்றவனுக்குத்தானே நிழ லின் அருமை தெரியும்.

செல்வத்தால் செழித்து வாழும் பூம்புகார் நகர மக்களுக்கு வறுமை யைப்பற்றி என்னதான் தெரியும். இந் நகரில் வாழக் கொடுத்துவைத்த மக் கள் முன்னைத் தவமுடையாரேயன்றி வேறுயார்? ஈங்குள்ள மக்கள்தான் புன்னையரும்பிற்கும் வேறுபாடு காணது தவிக்கின்றனர். முத்தோ அரும்போ! புலவனின் கற்பனை எத்துணைச் சிறப் புடையது!

"முன்னைத் தஞ்சிற்றில் முழங்கு
கடலோத மூழ்கிப்போக
அன்னைக் குரைப்பன் அறிவாய்
கடலே யென்றலறிப்பேரும்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த
வெண்முத்தம் தயங்குகானல்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப்
பேதுறுக்கும் புகாரே எம்மூர்".

கா. இராசலட்சுமி
VII ஆம் வகுப்பு

---

# உயர் வாழ்வு

உலக மக்களின் வாழ்க்கை இன் றைய சமுதாயத்தில் மிக நெருக்கடி யான நிலைமையில் இயங்கிக்கொண் டிருக்கிறது. பல்வேறின மக்கள் உல கில் வாழ்வதுபோல் கொள்கைகளும் பலவாக வேறுபட்டுக் காணப்படுகின் றன. மக்கள் பல பிரச்சினைகளையும் ஆராய்கிருர்கள். இக்காலத்தில் கடவுள் உண்டா? இல்லையா என்ற ஐயமும் தோன்றிப் பல இளைஞர்கள் விவாதம் புரிந்து வருகின்றனர். கடவுளைப் பற்றி விவாதம் செய்பவர்கள் விவாதங்களி னல் இதற்கு ஒரு முடிவு கட்டிக்கொள்ள முடியாது எனும் உண்மையை முதலில் விளங்கிக் கொள்ளவேண்டும். கடவுள் இல்லையெனக் கூறுபவர்களோடு உரை யாடினல் அவர்கள் கூறும் நியாயங்கள் மிகவும் வேடிக்கையாகவே காணப்படும். மனிதனுக்கு மேம்பட்ட ஆற்றல் ஒன்று மனிதனை வழிநடத்துகின்றதென ஒப்புக் கொள்ள வெட்கப்படுகிருர்கள். மனித ஆற்றலின் மகத்தான சாதனைகளை

நினைத்து நினைத்துப் பூரித்துப் போகிறார்கள். இவர்கள் மனித ஆற்றலை வியந்து கொண்டிருக்கிறார்களே அல்லாமல் இந்த மனித ஆற்றல் உடைந்துபோகும் மட்பாண்டம் போன்ற தென்பதை உணர்கிறார்களில்லை. இப்பவோ, பின்னையோ இரவு படுநேரமதிலோ இந்த வுடலை உயிர்விட்டுப் பிரியும் நிலை உண்டென்பதைச் சிந்தித்துப் பார்த்தால் மனித ஆற்றல் இதில் என்ன செய்து விடும் என்பது புலனாகவில்லையா? மின்சாரத்தையும், வானொலியையும், அணுக்குண்டு, ஜலவாயுக்குண்டுகளையும் கண்ட மனிதன் பிரிகின்ற உயிரை ஏன் தடுக்க முடியாது தவிக்கின்றான் என்பதையாவது நாங்கள் சிந்திக்கக் கூடாதா?

கடவுள் இல்லையெனத் தாம் வாதித்தால் தம்மைப் பெரிய அறிவாளிகள் என மற்றவர்கள் நினைப்பார்கள் எனக் கருதும் அறிவிலிகள் கூறும் சில நியாயங்களை நம்சோதர இளம் சிறார்கள் தம் இளம்உளங்களில் பதித்து தம்வாழ்வை வீணே பாழாக்குகின்றனர். உலக வாழ்வின் முன்னேற்றத்துக்குக் கடவுட் கொள்கையைப் பற்றிய சிந்தனைகள் பெரிய தடையென நினைக்கிறார்கள். ஆகையால் கடவுள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் உள்ளத்திலிருந்து கடவுளின் எண்ணத்தை வேரோடு பறித்து எறிந்துவிட்டால் சமயச் சண்டைகளும் சச்சரவுகளும் ஒழிந்து மனித உறவு பலமடையுமென நினைக்கிறார்கள். உலகில் நடக்கும் போர்களுக்கும் புரட்சிகளுக்கும் முக்கிய காரணம் கடவுட் சிந்தனையில்லாமையே; மனித ஆற்றலை நம்பும் அறிவினர் உலகில் நடக்கும் போர்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதையும், மக்களின் உணவுக்காக இலட்சக்கணக்கான பிராணிகள் பலிவாங்கப் படுவதையும் சிந்திக்க வேண்டும். கொலைவெறியும் இம்சைவெறியும் நிறைந்த மனிதர் அமைதியாயும் சமாதானமாயும் வாழும் நாள் எந்நாளோ?

அன்பு ஒன்றே மக்களைச் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழச் செய்ய வல்லது. அன்பே சிவம் என்பது யாரு மறிவர். கருணை வள்ளலான கடவுளை மறக்கும் எவரும் உய்ய வழிவேறில்லை. கடவுள் வணக்கத்தில் இறைவனை அடைய அன்புப்பாதையே முக்கியம் என்பதை யாம மறக்கக் கூடாது. மாணிக்கவாசகர் முதலிய நால்வர் திருமூலர் முதலாய தெய்வீகப் பெரியார்கள் தந்த அன்பு நூல்களே எம்மை உய்விக்க வல்ல சிறந்த நூல்களாம். இத்தகைய நூல்களின் உண்மைப் பொருளை உணர்ந்து அன்பு நெறியில் ஆன்ம ஈடேற்றம் குறித்து வாழும் வாழ்வே உயர்வாழ் வென்பதை உணர்ந்து உய்வடைவோமாக.

சி. சரோஜினிதேவி
VIII ஆம் வகுப்பு

---

# அறத்தின் சிறப்பு

“அறஞ் செய விரும்பு” என்பது ஒளவைப் பிராட்டியாரின் அருமை வாக்கியம். இம்மை மறுமை என்னும் இரண்டினையும் தரும் பெற்றி வாய்ந்தது அறம். அத்தகைய அறத்தின் சிறப்பு அளவிடற்கரிது. அறஞ் செய்வோரிடத்து அன்பு நிகழ வேண்டும். அறத்தின் பண்புரைக்க வந்த வள்ளுவர் பெருமான் பிறரது செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளுதலும், புலன்கள்மேற் செல்லுகின்ற அவாவும், அவையேதுவாகப் பிறரிடத்து வரும் வெகுளியும், வெகுளி காரணமாக வரும் கடுஞ் சொல்லும் ஆகிய இந்

நான்கினையும் கடிந்து நடப்பதே அறமெனப்படும் என்று கூறுகின்றார். இதனை

“அழுக்கா றவாவெகுளி யின்னாச்
சொல நான்கும்
இழுக்கா வியன்ற தறம்”

என்னும் குறள் புலப்படுத்துகின்றது. அறஞ் செய்வதனால் வரும் பயன் என்ன? என்ற வினாவுக்கும் நல்ல ஒரு எடுத்துக்காட்டுமூலம் விடையளிக்கின்றார் வள்ளுவர். ஒருவன் சிவிகையைத் தாங்குகின்றான். இன்னொருவன் சிவிகையிலிருந்து செல்கின்றான். இவ்விடத்தில் தாங்குவோனும் செலுத்துவோனும் செய்த அறத்தின் பயன் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. இதனை,

“அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை”

என்னும் குறட்பா தெரிவிக்கின்றது. தருமஞ் செய்வதற்குக் கால எல்லை இல்லை. இளமை, முதுமை என்ற பாகுபாடுகள் இல்லை. எக்காலத்திலும், எப்பருவத்திலும் செய்யலாம். யாம் இப்பொழுது இளமை யுடையவர்களாக இருக்கின்றோம். பிற்காலத்தில் அறத்தைச் செய்வோம் என்று சிலர் கூறுவது தவறு. தினந்தோறும் அறஞ் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்த அறம் இந்த உடம்பு அழியுங்காலத்தும் உயிருக்குத் துணையாய் நிற்கும். இதனையே வள்ளுவப் பெருந்தகையார்,

“அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை”

என்றார்.

அன்பு, அருள், தவம், தானம், வாய்மை, ஒழுக்கம், அடக்கம் என்பனவும் இன்னபிறவும் அறத்தின்பாற் படுவனவாம். அவற்றை யெல்லாம் நூல்களிற் கூறப்பட்டவாறு கடைப்பிடித்து ஒழுகுதலே சிறந்த அறமாம். இதனையே சிவஞானசித்தியாரும்,

“ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல்
வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு
அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்களானால் இரங்குவான்
பணியறங்கள்”.

என்று கூறுகின்றது.

ந. கோபாலகிருஷ்ணன்
ஆ. க. பொ. த.

---

# தமிழ்மொழியின் மேன்மை

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்” என்று பாட்டுக் கொரு புலவனாகிய மகாகவி பாரதியார் கூறுகின்றனர். “தமிழெனு மினிய தீஞ்சொற் றையல்” எனவும் இன்னொரு அறிஞர் கூறுகின்றனர். இவற்றிலிருந்து தமிழெனுஞ் சொல்லுக்குப் பொருள் இனிமை என்பது புலனாகின்றது. இனிமையே உருவாக இம் மொழி விளங்குதல் அதன் மேன்மையைக் காட்டுகின்றதல்லவா? மிகப் பழைய காலத்திற்றோன்றித் தனித்தியங்கும் மாபெரும் மேன்மை கொண்டது நந்தமிழ்மொழி. ஒரு மொழிக்கு முக்கிய கருவிகளாக விளங்கும் இலக்கிய இலக்சணங்களைக் குறைவறக் கொண்டுள்ளது

ஆதியில் அகத்தியர் தமிழுக்குத் தம் பெயரால் முத்தமிழிலக்கணம் அமைத்தனர். அதனை வரம்பாகக் கொண்டு சங்கத்திலே புலவர்கள் தமிழை ஆராய்ந்து நூல்களை ஆக்கினர். அந்நூல்களுள் ஒருசில அழிந்தன. இப்பொழுது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலும், கடைச் சங்கத்திலும் பிற்பட்ட காலத்திலும் ஆக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான

செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் தமிழ்மொழிக்கு மேன்மை அளித்துக் கொண்டிருக்கின்றன. கற்பவருள்ளத்தைக் கனியச் செய்யும் கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் என்பன நந்தமிழ்மொழியின் மேன்மைக்குச் சான்றுபகர்வன. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வள்ளுவரால் ஆக்கப்பட்ட திருக்குறள் இன்று பதினைந்துக்கு மேற்பட்ட பல்வேறு பாஷைகளில் மொழிபெயர்க்கப் பெற்றுப் போற்றப்படும் பெருமையொன்றே நந்தமிழ் மொழியின் மேன்மையைப் புலப்படுத்தும். பாரதியாரும் சிலப்பதிகாரத்தின் பெருமையைப்பற்றிக் கூறுமிடத்து "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாராட்டுகின்றார்.

மிகப் பழைய காலந் தொட்டுத் தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தர்களும் தமிழ் மொழியை வளர்த்தனர் என்பதைச் சங்கநூல்களால் அறியலாம். அக்காலத்து ஆட்சிபுரிந்த அரசர்களுட் பலர் புலவர்களாயிருந்தது மன்றிப் புலவர்களை ஆதரித்தும் வந்தனர். வடக்கே வேங்கடமும் தெற்கே குமரியும் மேற்கும் கிழக்கும் கடலையும் எல்லையாகக் கொண்ட நிலப்பரப்பில் தமிழ் வளர்ந்தோங்கியதாக நூல்கள் கூறுகின்றன. இப்பொழுது பல்வேறு மொழிகளும் அவ்விடங்களிற் சிலவற்றைக் கொள்ளை கொண்டுவிட்டன.

தமிழில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் பண்டு தொட்டுச் சிறப்புடன் விளங்கின. பல வேறு வகைப்பட்ட இசைக் கருவிகளையும் தமிழர்கள் ஆக்கி அவற்றை இசைத்துப் பாடல்களைப் பாடினர். இசைக் கருவிகளின் வகைகளையும் அவற்றை இசைக்கும் முறைகளையும் தமிழ் நூல்கள் கூறுகின்றன. அந்நூல்களில் கூறப்பட்ட முறைகளை ஆராய்ந்து நம் ஈழ நாட்டிற் றோன்றிய உயர்திரு. விபுலானந்த அடிகள் என்னும் பெரியார் "யாழ்நூல்" என்னும் அரும் பெரும் நூலை ஆக்கி யாழின் சிறப்பைத் தமிழ் மக்கள் அறியச் செய்தனர்.

இவ்வுலகிற் றோன்றிய பல மொழிகள் பேச்சுவழக்கொழிந்து அழியினும் அந்நிய ராட்சியால் நசுக்கப்படினும் அழியா நிலைமை தமிழ் மொழிக்குண்டென்பது அது இன்று வளர்ந்திருக்கும் நிலையிலிருந்தே நாம் அறியலாம். நம் நாட்டில் நந்தமிழுக்கு சம உரிமை கிடைக்க நாம் ஒவ்வொருவரும் ஒற்றுமையுடனும், அபிமானத்துடனும் ஒத்துழைக்க வேண்டும். தமிழன் என்று தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். எமது "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் எமது இன்றியமையாத கடனாகும். அன்னை மொழியைப் பொன்னெனப் போற்றுவோம்".

**வே. முத்துலிங்கம்**
க. பொ. த.

---

# பாரதி வாழ்விலே....

சேற்றின் மத்தியிற் செந்தாமரை மலர்ந்தாற்போலவும், முட்கள் நிறைந்த செடியில் மோகன ரோஜா மலர்ந்தாற்போலவும், இந்தியாவிலே எட்டயபுரத்திலே பாழும் வறுமையின் மடியிலே தனது பெற்றோர்க்கு ஏகபுத்திரனைப் பிறந்தார் பாரதியார். இவர் பிறந்த நேரத்தில் இவரது தாய் தந்தையர் மிகவும் ஒடிந்த நிலையில் இருந்தனர். ஒரு வயிற்றுச் சோற்றுக்கே பஞ்சப்படும் அவர்கள் பாரதியாரை எப்படியோ பள்ளியிற் சேர்த்து விட்டனர். அவரது ஐந்தாவது வயதில் பாரதியார் பள்ளிக்கூடத்தில் படித்த நாட்கள் மிகமிகக் குறைவு. அதற்கு அவரது வறுமை நிலையே காரணமென்றும் கூறலாம். அவர் சிறுவயது முதலே தாய் மொழிப்பற்றுக் கொண்டு சில

சிறிய பாட்டுக்கள் இயற்றிப் பாடியுள்ளார். அவர் சிறு வயதிற் பாடிய பாக்களிற் சில கண்ணன் பாட்டு பாப்பாப் பாட்டு முதலியவை. சிட்டுக் குருவிக்குச் சிறைவாசம் பிடிக்குமா? பள்ளிப் படிப்பைச் சிறிய வயதிலேயே விட்டுச் சோலைகளிலும் கடற்கரைகளிலும் தமது காலத்தைப் போக்கினார். அங்ஙனம் திரியும் போதே பல பாடல்களை இயற்றியுள்ளார்.

அவர் பணத்தையோ பகட்டையோ சிறிதும் விரும்பினாரல்லர். தாய்மொழிப்பற்றே தமது இலட்சியமாகக் கொண்டு தமிழ்த் தொண்டு செய்து திரிந்தார். அந்நாளில் அவர் பல கஷ்டங்கள் அடைந்தார். எனினும் இவற்றால் அவர் சிறிதும் கலங்கினாரல்லர். தமிழ்க்கவிகள் இயற்றுவதிலே திறமை பெற்றதனால் "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா" என்ற புகழையும் அடைந்தார். அவரது நெற்றியிற் பெரிய சந்தனப் பொட்டும் பெரிய தலைப்பாகையுமே அவரது அறிவுத் திறனை நமக்கு எடுத்துக் காட்டும். எப்பொழுதும் அவரது முகம் நம்மனதில் நின்று நினைப்பூட்டும். அவர் தமது காலத்தில் சுதேசமித்திரன் என்னும் பத்திரிகை ஆசிரியராகக் கடமை ஆற்றினார். அப்பொழுது தான் அவரது பாடல்கள் வெளிவந்தன. அவர் பாடிய பாடல்கள் இன்றும் நம் உள்ளத்தைத் தொடும்படி உணர்ச்சி மிகுந்தவை. அவைகளில் "யாமறிந்த மொழிகளிலே" என்பதும் ஒன்று. இன்னும் பல தமிழ்ப் பாக்கள் பாடித் தமிழ்த் தொண்டாற்றினர். தமிழ்த் தொண்டு செய்வதைக் காலதேவனும் காணச் சகிக்காமல் அவரது முப்பத்தொன்பதாவது வயதில் விண்ணுலகுக் கனுப்பினான். அன்று தொட்டு இன்றுவரை தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாமெல்லோரும் அவர் விண்ணுலகெய்திய தினத்தன்று அவரை நினைவு கூருகிறோம். அவ்வளவில் நின்றுவிடாது அவரது பிறந்த தினத்தையும் கொண்டாட வேண்டும். வாழ்க தமிழினம்! வாழ்க பாரதி!!

**க. சி. சின்னய்யா**
க. பொ. த. வகுப்பு

---

# MY PET

My pet is a dog. I call him John. He loves me very much. He is grey in colour. I play with him in the evenings. If he barks any one will be afraid. He does not bite. Once I went to Colombo and stayed there with my uncle for a week. Mother told me that he was searching for me in the evenings. One day a classmate of mine pushed me down and I began to cry. John saw this and jumped at him. He is so good a dog.

S. KARTHIGEYALINGAM,
Std. V

---

# MY FIRST VISITE TO THE AERODROME

I had a chance to visite the Aerodrome when my uncle left for India by plane. I went to the airport with my father, mother and brother to give him a send-off. It was a pleasant morning. Our drive to the airport was lovely. My brother and I enjoyed it very much.

It was a thrill to arrive at the aerodrome. The passengers, who had come to travel by plane were looked exited and busy. Some of them feeling sad to bid good by to their dear ones. The airport officers were busy at their work. The Customs officer was eager to catch some one. My uncle too, had to leave us and go through all the formalities.

Next there was the air Ceylon crew They walked in majestically into the sitting room. They were neatly dressed in blue. The aeroplane was ready on the runway. The announcement was made for the passengers to be ready. The crew walked up to the plane and took their possition. Then the passengers walked up to the plane and took their seats. The plane, with it's dignified geit ran off and took the flight. It was a beauty to watch it fode away.

I could still recollect the pleasant memories of it.

A KARUNADEVY,
S. S. C.

---

துன்பம் நம்மைத் தாக்கும்போது, நண்பர்களிடம் நமது இதயக்குமுறலைத் திறந்து காட்டினால் பாதித்துன்பம் தொலைந்தே போகும். இன்பம் வரும்போது சிறந்த நண்பன் அதை இரட்டிப்பாகப் பெருக்குகின்றான்.

—பேகன்

★ ★ ★

அன்பும் சாந்தமும் உடையவனே பலமும் மனோதிடமும் உடையவன். காமக் குரோதத்திற்கும், அதிருப்திக்கும் ஆளானவனிடம் பலமும் மனோதிடமும் இருக்காது.

—மார்க்க ஔரேலியன்

★ ★ ★

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

—திருவள்ளுவர்

★ ★ ★

அன்பு சில குறைகளையும் அறிவு சில பிழைகளையும் பொருட்படுத்தாது. ஆனால் உண்மை எந்தக் குறையையும் எவர் பிழையையும் மன்னிக்காது; பொறுக்காது.

—ரஸ்கின்

# சங்கங்கள்

## மேல்வகுப்பு மாணவர் சங்கம்

தலைவர் : கனம் தலைமை ஆசிரியர் அவர்கள்
உபதலைவர் : உதவி ஆசிரியர்கள்
பொறுப்பாசிரியர் : திரு. பொ. கனகரத்தினம் அவர்கள்

தலைமை ஆசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நமது சங்கமானது ஆறும் வகுப்புத் தொடக்கம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பு வரையுள்ள எல்லா மாணவர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு செவ்வனே நடைபெற்று வருகிறது.

எங்கள் சங்கம் இருவாரங்களுக்கொரு முறை வியாழக்கிழமைகளில் நடைபெற்றுவருகிறது. விசேட கூட்டங்கள் நடைபெறும் பொழுது கீழ்வகுப்பு மாணவர் சங்கத்தையும் எமது சங்கம் சேர்த்துச் செவ்வனே நடாத்தி வருகிறது. விசேட கூட்டங்களில் பாடசாலை ஆசிரியர்களாலும் சமயஅறிவு அரசியலறிவு நிரம்பிய பெரியார்களாலும் சொற்பொழிவுகள் நடாத்தப் பெறுகின்றன.

மாணவர் சங்கத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் பலமாணவர்கள் உற்சாகத்தோடு பங்குபற்றி வருகின்றனர். எமது சங்கத்திலுள்ள பலமாணவர்கள் வெளியிடங்களிலுள்ள கல்வி நிலையங்கள் நடாத்திய பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றுள்ளனர். சிறிய நாடகங்கள், நடனங்கள் வாய்ப்பாட்டுகள், சம்பாஷணைகள் ஆதியவிடயங்களும் எமது சங்கத்தில் நடைபெற்று வருகின்றன.

எமது சங்கச் சார்பில் "சைவ சற்குண போதினி" என்னும் பத்திரிகை கையெழுத்துப் பிரதியாக மாதமொருமுறை வெளிவருகிறது. குறித்த பத்திரிகை மாணவர்களால் எழுதப்பட்ட சிறந்த கட்டுரைகளைக் கொண்டு வெளிவருவதால் பத்திரிகை வாசிக்கும் கூட்ட நாட்களில் மாணவர்கள் மிகக் குதூகலத்துடன் காணப்படுவர். இதனால் பலமாணவர்கள் கட்டுரைகள். சிறுகதைகள் எழுதும் வன்மை பெற்றிருப்பது இச்சங்கம் பெருமைப்படக் கூடிய விடயங்களில் ஒன்றாகும்.

இனிவருங்காலங்களிலும் சங்கம் மேலான பல ஆக்கவேலைகளைச் செய்து மேலோங்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

**இ. சிவஞானம்மாள்**
காரியதரிசி

---

## மத்தியவகுப்பு மாணவர் சங்கம்

தலைவர் : தலைமை ஆசிரியர் அவர்கள்
உபதலைவர் : உதவி ஆசிரியர்கள்
பொறுப்பாளர் : செல்வி க. மரகதவல்லி
காரியதரிசி : செல்வன் சி. கார்த்திகேயலிங்கம்
உபகாரியதரிசி : செல்வி செ. செல்வகுணேஸ்வரி

மூன்றும் வகுப்புத் தொடங்கி ஐந்தாம் வகுப்புவரையும் உள்ள மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு மாதமிருமுறை வியாழக்கிழமைகளில் எங்கள் சங்கம் செவ்வனே நடைபெறுகின்றது.

பாட்டு, கதை, பேச்சு, சம்பாஷணை நடித்தல் ஆகிய விடயங்களில் எங்களுக்குப் போதிய பயிற்சியை அளிக்கிறது. கீழ்வகுப்புச் சங்கத்திலிருந்து பாலர்களாய் வந்த எங்களை மேல் வகுப்புச் சங்கத்துக்குத் தகுந்தவர்களாக இச்

சங்கம் ஆக்குகின்றது என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறோம். அறிவாற்றல் மிக்க பெரியார்கள்வந்து எங்களுக்குப் புத்திமதிகள் கூறும் போதும், வேறு விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும்போதும் நாங்கள் தனித்து நிற்காது மூத்த சகோதரமாகிய மேல்வகுப்புமாணவர் சங்கத்துடன் சேருகின்றோம். எங்கள் சங்கம் பல்லாண்டு காலம் நன்றாக வளர வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**சி. கார்த்திகேயலிங்கம்**
காரியதரிசி

---

## ஆரம்பபிரிவு மாணவர் கல்வி விருத்திச் சங்கம்

தலைவர் : **திருமதி பா. வைத்திலிங்கம்**
உபதலைவர் : **ஏனைய ஆசிரியர்கள்**
பொறுப்பாளர் : **திருமதி வ. சின்னத்துரை**

இச்சங்கம் ப்ர. கி. பி, பா. மே. பி, இரண்டாம் வகுப்பு ஆண் பெண் இருபாலாரையும் அங்கத்தவர்களாகக் கொண்டது. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாம் நான்காம் வியாழக் கிழமைகளில் இச்சங்கம் நடாத்தப்பெறும். பாட்டு, கதை, நடித்தல், ஆகிய விடயங்களில் மாணவர்கள் பங்குபற்றி ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் சங்கத்தை நடாத்துகின்றனர்.

**வ. சின்னத்துரை**
(பொறுப்பாசிரியர்)

---

## எமது பாடசாலைச் சமயாபிவிருத்திச் சங்கம்

போஷகர் : **முகாமையாளர் திரு. தெ. து. ஜயரத்தினம் B. A. அவர்கள்**
தலைவர் : **கனம் தலைமை ஆசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்**
உபதலைவர்கள் : **உதவி ஆசிரியர்கள்**
பொறுப்பாசிரியர் : **திரு. நா. ஆறுமுகம் அவர்கள்**

பரம் பொருளின் திருவருளால் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன் நிறுவப் பெற்ற இச்சங்கம் இதுவரை காலமும் சமய சம்பந்தமான பல் வேறு துறைகளிலும் முன்னின்று தொண்டாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். சமயக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் இக்காலத்தில் இத்தகைய சங்கங்களே பாடசாலை மாணவர்க்கு ஒழுக்கத்தையும் சைவப் பண்பையும் பரப்புதற்கு உறுதுணையாக விளங்குவன.

எமது சங்க ஆதரவில் மாதம் ஒருமுறை சைவப் பிரசங்கம் பாடசாலையில் நடைபெறுகிறது. அன்றியும் நாயன்மார் குருபூசைத் தினங்கள், நாவலர் தினம், வள்ளுவர் தினம், நவராத்திரி பூசைநாட்கள் என்பனவும் கொண்டாடப்பெறுகின்றன. இன்னும் சமய விஷயப் போட்டி, தேவாரப் போட்டி என்பன நடாத்தியும் சைவ மகா சபைகள் நடத்தும் போட்டிகளில் மாணவரைப் பங்குபற்றச் செய்தும் இச்சங்கம் பல தொண்டுகளை ஆற்றி வருகின்றது.

